ஓலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-23 | 09-11-2005 | புதன்கிழமை | ஓசை-265



கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-13211)

# சமாதானப்பேச்சுக்காலத்தில் புலிகளை பல வழிகளில் பலவீனப்படுத்தினோம்!

## டெய்லி மிரரில் மிலிந்த மொறகொட



[கொழும்பு]

**அமைதிப் பேச்சுக்கள் மூலமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பிளவு உருவாக்கியதும் அதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளை சர்வதேச வலைப் பின்னலில் சிக்க வைத்தும் அமைதிப் பேச்சுக்களினூடே விடுதலைப்புலிகளின் கப்பல்களை அழித்ததும் நாம் தான் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகமான டெய்லி மிரர் ஆங்கில நாளிதழுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவும் கடந்த காலங்களில் அமைதிப் பேச்சுக்களில் சிறிலங்கா அரச பிரதிநிதியாகவும் பங்கேற்ற மிலிந்த மொறகொட அளித்துள்ள நேர்காணலிலேயே இவ்வாறு கூறினார்.

மிலிந்த மொறகொட அளித்துள்ள நேர்காணலில் மேலும்;

சிங்களத் தீவிரவாதிகள் சொல்வது போல் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில் நாட்டினது பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட வில்லை. மாறாக எமது ஆட்சிக்காலத்தில் வலுவாக இருந்தது அமைதிப் பேச்சுக்களை நாம் நடத்திக் கொண்டிருந்த போதும் விடுதலைப்புலிகளின் இரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப்பொறுப்பாளருடன் சிறுவர் பா.நி.பிரதிநிதிகள் சந்திப்பு!

அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் சிறுவர் பாதுகாப்பு நிதிய இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதிகளுக்கும் இடையேயான சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கைக்கான வதிவிடப்



பிரதிநிதியாக இருந்து மாற்றம் பெற்றுச்செல்லும் றிச்சாட் மாவீர் மற்றும் புதிதாகப் பதவியேற்கும் கிறிஜோர் பிராங்ளின் ஆகியோர் அரசியல் துறைப்பொறுப்பாளரைச் சந்தித்தனர். மாற்றம் பெற்றுச்செல்லும் சிறுவர்பாதுகாப்பு நிதியப்பிரதிநிதி தமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதற்கு அரசியல்துறைப்பொறுப்பாளரிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்–கண்காணிப்புக்குழு அம்பாறையில் பேச்சுவார்த்தை

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தரப்பில் புஸ்போன் கிளாஸ்ஸஸ் அவர்களும் தமிழீழ

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைபறிச்சான் படையினரால் தமிழ் இளைஞன் கைது!

திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சான் இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து நேற்று பிற்பகல் 3.40 மணியளவில் தமிழ் இளைஞர் ஒருவர் சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மூதூர் குமாரபுரம், கிளிவெட்டியைச் சேர்ந்த கிருஸ்ணப்பிள்ளை அருள்ராஜ்(வயது-23) என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவராவார். கிளிநொச்சியில் உள்ள ஊர்தி திருத்துமிடம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த இவர் கட்டைபறிச்சான் சோதனைச் சாவடியூடாகச் செல்லும்போது, தனது பயணப்பையில் தமிழீழ எழுச்சிப் பாடல்கள் அடங்கிய ஆறு இறு வட்டுக்களை எடுத்துச் சென்றதனாலேயே கைது செய்யப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.மேலதிக விசாரணைகளிற்காக மூதூர் சிறிலங்காப்பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பின் மத்தியில் 2006– வரவு செலவுத்திட்டம் தாக்கல்!

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தின் 2006 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் சரத் அமுனுகம நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

தேர்தலுக்கு முன்பாக வரவு-செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்ததை எதிர்த்து அனைத்து எதிர்க்கட்சிகளும் நேற்று பாராளுமன்றத்தைப் புறக்கணித்தன.

சபாநாயகர் டபிள்யு.ஜே.எம் லொக்குபண்டார தலைமையில் நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு பாராளுமன்றம் கூடியது. நேற்று நிகழ்ச்சி நிரல் வாசிக்கப்பட்டபோது நிதியமைச்சர் சரத்அமுனுகம பாராளுமன்றத்திற்குள் நுழைந்தார்.

பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்திய நிதியமைச்சர் சரத் அமுனுகம அதிகாரப் பவரலாக்கலுடன் பேச்சுவார்தை மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பதே சனாதிபதியின் நிலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமூக அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு விற்பனை முகவர்கள் செயற்பட வேண்டும்

### —தமிழீழ நிதித்துறை வணிக ஒன்றிய பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

தமது வியாபாரத்தை மேம்படுத்துவதுடன் மாத்திரம் நின்றுவிடாது சமூக அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு விற்பனை முகவர்கள் செயற்பட வேண்டும் எனத் தமிழீழ நிதித்துறையின் வணிகர் ஒன்றியப் பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப்பகுதிகளுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனை முகவர்களைச் சந்தித்து பேசும்போது அவர் இதனைத்தெரிவித்தார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற இச்சந்திப்பில் வருவாய்ப்பகுதிப் பணிப்பாளர் மருதனும் கலந்து கொண்டிருந்தார். இதில் வணிகர் ஒன்றியப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்திற்கு வெளியே எதிரணியினர் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வரவு- செலவுத்திட்டத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்று வட்டத்திற்கு அருகே ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.நேற்று மாலை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்தை நோக்கிச் செல்ல முற்பட்டபோது பொலிசார் அதனை தடுத்து நிறுத்தியுள்ளனர்.இதனையடுத்து பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அருகில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் வரவு செலவுத்திட்டம் சனாதிபதித்தேர்தல் காலத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மின்வேலியில் சிக்குண்டு யாழ். நகரில் 8 படையினர் படுகாயம்

### — இருவரின் நிலை கவலைக்கிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் அமைத்திருந்த மின்வேலியில் இராணுவ ட்ரக் வாகனம சிக்கியதில் எட்டு சிறிலங்காப் படையினர் படுகாயமடைந்துள்ளனர். இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

யாழ். நகரில் உள்ள ஞானம் மற்றும் சுபாஸ் உணவு விடுதிகளுக்கு இடையில் இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவு மின்வேலி அமைத்துள்ளது. அந்த மின்வேலியில் இராணுவ ட்ரக் வாகனம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் சிக்கியது.

இதில் எட்டுப் படையினர் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் இருவரது நிலைமை

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு இராணுவம் குவிப்பு!

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இரவு பலத்தஇராணுவக்காவல் போடப்பட்டிருந்தது.சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த எட்டுப்படையினர் நேற்றுக் காலை மினவேலி ஒன்றில் அகப்பட்டு படுகாய மடைந்ததையடுத்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த இராணுவத்தினருக்கே மேற்படி படையினர் காவலாக வைத்தியசாலை முழுவதும் ஆயுதங்களுடன் அமர்ந்திருந்தனர். சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நீண்ட இடைவேளைக்குப் பின்பு நேற்று இரவு சிறிலங்காப்படையினர் யாழ். வைத்தியசாலையில் விடுதிவிட்டுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

பொலிமர் இறப்பர்முத்திரை உடன் செய்து பெற்றுக்கொள்ளநாட வேண்டிய இடம் வாணி புத்தகசாலை (பிக்பென்ஸ்) கனகபுரம் டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி-13264)

### Wep Site Designing

உங்களது வியாபார நிறுவனங்களைச் சர்வதேச ரீதியில் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்திடவும்,வியாபார நிறுவனத்தின் பெயரில் **இணையத் தளங்களை பதிவு செய்து உருவாக்கிடவும்**

***தொடர்புகட்கு:***

வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி,கிளிநொச்சி (சி.13074)


## சிறுவர்தின விழா

பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளில் சர்வதேச சிறுவர் தினவிழா நிகழ்வுகள் அண்மையில் மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவில் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்திலும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மு.யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் நடைபெற்றன. (24)

# மீளக்குடியமர்ந்தோருக்கு உணவற்ற பொருட்கள் உதவி

(அலுவலக செய்தியாளர்)

2004ஆம் ஆண்டு மார்கழி மாதத்திற்குப்பின்னர் இந்தியா, வவுனியா, மன்னார் அகதிகள் முகாம்களிலிருந்து தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு யு.என்.ஏச். சி. ஆர் நிதியுதவியுடன் பஜ் நிறுவனத்தினரால் உலர் உணவற்ற பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.அந்த வகையில் மேற்படி பகுதிகளிலிருந்து கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்த 179குடும்பங்களிற்குநேற்று கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து உலர் உணவற்ற பொருட்கள் வழங்கப்பட்டன. மேற்படி குடும்பங்களுக்கு கூரைவிரிப்புகளும் வழங்கப்படவுள்ளதெனவும் இதேபோன்று கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவில் 168கூரைவிரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதெனவும் பச்சிலைப்பள்ளி, பளை, பூநகரி பிரதேசசெயலர்பிரிவுகளில் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கும் மேற்படி பொருட்கள் வழங்கப்படவுள்ளதென பஜ் நிறுவனப்பிரதிநிதி தெரிவித்துள்ளார். (சோ)

# சிகையலங்கார நிலையங்களுக்கான விதிமுறைகளைக் கடைப்பிடிக்க பணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகத்தில் இயங்கிவரும் சிகையலங்கார நிலையங்கள் அனைத்தும் பின்வரும் விதிமுறைகளைக் கடைப்பிடித்து தங்களது நிலையச்செயற்பாட்டினை மேற்கொள்ளும் வண்ணம் தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டியுள்ளனர்.

முகச்சவரம் மேற்கொள்ளும் போது அந்நபரின் முன்னிலையில் புதிய பிளேட் பாவனைக்கு எடுக்கப்படல்வேண்டும்.

போர்வையாக பயன்படுத்தும் துணி நாளாந்தம் கழுவப்பட்ட தூய்மையான துணியாக இருக்கவேண்டும்.அத்துடன் ஓர் கதிரைக்கு குறைந்தது மூன்று துணிகள் வீதம் இருத்தல்வேண்டும்.

முகச்சவரம் மேற்கொள்ளப்பயன்படுத்தும் கத்தி20-30நிமிடம் சவலோனில் இடப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்ட கத்தியாக் இருப்பதோடு ஒரு கதிரைக்கு இரண்டு கத்திகள் வீதம் இருத்தல் வேண்டும். -

முகச்சவரத்தின் பின் முகம் துடைக்க தூய மென்தாள்களை மட்டும் பயன்டுத்தவேண்டும்.

முகச்சவரங்களுக்கு கட்டிச் சவர்க்காரங்களைப் பயன்படுத்தாது அதற்கென வியாபார நிலையங்களில் விநியோகிக்கப்படும் திரவ நிலையான போத்தல்கள், ரியூப்களில் வரும் தூய்மைப்படுத்தும் ஊடகங்களை மட்டும் பயன்படுத்தவேண்டும்.

நிலையத்தின் கழிவுகளான முடி தனியாகவும், ஏனைய கழிவுகள் தனியாகவும் சேகரிக்கப்பட்டு தகுந்தோரின் ஆலோசனைகளிற்கமைவாக இறுதியகற்றல் மேற்கொள்ளல்வேண்டுமென வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)


# பணிநிலை வேண்டுகை

- மோட்டார் சைக்கிள் திருத்துநர்கள்
- மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பாளர்கள்

மேற்படி பணிநிலைகட்கு வெற்றிடம் இருப்பதால் உடன்வந்து பணியில் இணைந்து கொள்ளலாம். தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்

## சிவகுருகட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

யாழ். சாலை, பரந்தன், கிளிநொச்சி.
(சி-13219)


## தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் தமிழீழ நுண்கலைக்கல்லூரி நடத்தும்

# ஓவியப்போட்டி

நவம்பர் -27 தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் தமிழீழ நுண்கலைக்கல்லூரியினால் பாடசாலை மாணவர்களுக்கும் ஏனைய தனியாருக்குமென இரு பிரிவுகளாக போட்டி ஒன்றை நடாத்த உள்ளோம்.

**01.பாடசாலை மாணவர்களுக்கான போட்டித் தலைப்புக்கள்**

1. விடியலை நோக்கி
2. அணையாத தீபங்கள்

**02. தனியாருக்கான போட்டித் தலைப்புக்கள்**

1. வீரத்தின் விழுதுகள்
2. மலரும் தமிழீழத்தில்

**03. போட்டி விதிகள்**

1. ஆக்கங்கள் 60cm x -50cm அளவுடையதாக ஆட்போட் அல்லது பொருத்தமான கடதாசியில் வரைதல்வேண்டும்.
2. விருப்பமான வர்ணங்களைப் பயன்படுத்தலாம்.
3. ஆக்கங்கள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும் என்பதை உறுதி செய்ய பாடசாலை மாணவர்கள் அதிபரின் பாடசாலை முத்திரையுடன் கையொப்பம் பெற்று அனுப்புதல்வேண்டும்.
4. ஏனைய போட்டியாளர்கள் உங்களின் ஆக்கத்தில் தொடர்புகளுக்கான கடித முகவரியும், பெயரும் தெளிவாக எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.
5. ஆக்கங்களை 15.11.2005இற்கு முன்பதாக தமிழீழ நுண்கலைக்கல்லூரி, கிளிநொச்சி மாவட்டம் என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கவும்.

குறிப்பு:- நடாத்தப்படும் இவ் ஓவியப்போட்டியில் பெறப்படும் ஆக்கங்கள் தமிழீழதேசியத் தொலைக்காட்சிக்கு ஆவணப்படுத்துவதுடன் பெறுமதிவாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படும்.

தமிழீழ நுண்கலைக்கல்லூரி
கிளிநொச்சி மாவட்டம்.
(சி-13326)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(மன்னார்)

மன்னாரில் தற்சமயம் கட்டாக்காலி நாய்களின் கடிக்குள்ளானோர் அதிகரித்து வருகிறார்கள் நேற்று முன்தினம் மன்னார் பொது வைத்தியசாலையில் நாய்க்கடிக்கு இலக்கான பத்து பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்திருப்பதாகவும் இதனை உடனடியாக தடைசெய்யுமாறு மன்னாரில் உள்ள பொது அமைப்புக்களின் ஒன்றியம் மன்னார் பிரதேச சபைக்கும் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

## கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச உழவு இயந்திர சங்கத்தினருக்கான கலந்துரையாடல் துணுக்காய் பிரதேச செயலர் அலுவலர் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் காலை 11.30 மணிக்கு உழவு இயந்திர சங்கத் தலைவர் சி. இரத்தினசிங்கம் தலைமையில் இடம்பெற்றன.

இங்கு கருத்துரைகளை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. புனிதன், பாண்டியக்குளம் துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் ம. இன்பபாவலன், தமிழீழ மோட்டார் ஊர்தி பரிசோதகர் பிரசன்னா ஆகியோர் வழங்கினர்.

இந் நிகழ்விற்கு 50இற்கு மேற்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (24)


முகாமைத்துவக் கல்லூரியினால்
நடைமுறைப்படுத்தப்படும் aat கற்கை நெறிக்கான

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**தகைமைகள்:- (சா/த) பரீட்சையில் ஆறு சித்திகள்
அல்லது (உ/த) பரீட்சையில் இரு சித்திகள்**

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கும் முகாமைத்துவக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட தகைமையுடையோர்கள் தங்களது விண்ணப்பங்களை 25.11.2005இற்கு முன்னதாக முகாமைத்துவக்கல்லூரி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- விரிவுரைகள் யாவும் சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும்.

நிர்வாகம்,
முகாமைத்துவக் கல்லூரி,
கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி
(சி-13320)


## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வ.இல.:-273/04
தன்மை:- பணம்,
பெறுமதி:- 85000/=

| வழக்காளி | எதிராளிகள்:- |
|---|---|
| செல்லமுத்து செல்லப்பாண்டியன், 445/1, அம்பாள் வீதி, அன்புவழிபுரம், திருகோணமலை. | 1) காசிப்பிள்ளை கணேசமூர்த்தி, 2) சாந்தி விக்டர், அம்பலவாணர் கமம், எல் பீ-2,டீ எஸ்.5, பரந்தன். |

# அறிவித்தல்

மேற்குறித்த எதிராளிகளுக்கு,

உங்கள் இருவருக்கும் எதிராக வழக்காளியால் தொடரப்பட்ட மேற்படி வழக்கில், உங்களுக்குரிய இடைக்காலத் தீர்வையும், அறிவித்தலையும் முறை நிறைவேற்றுவர் மூலம் சேர்ப்பிக்க முயன்றபொழுது, நீங்கள் அம்முகவரியில் இல்லாமையால், இப்பகிரங்க அறிவித்தல், இடைக்காலத் தீர்வை என்பன பிரசுரிக்கப்படுகின்றது. நீங்களோ அல்லது உங்களது நலனில் அக்கறை உடையவர்களோ இவ்வறிவித்தல் வெளியாகி 14 நாட்களுக்கிடையில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில், குறித்த இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை இத்தால் உங்களுக்கு இப்பகிரங்க அறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த 2005 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஏழாம் திகதி, "மன்றின் கட்டளைப்படி"

வரைபு:- தா.இ.குலசங்கர்,
சட்டவாளர்,
"பகலவன் போட்டோக் கொப்பி"
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
(சி.13318)

பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வ.இல.:-273/04
தன்மை:- பணம்,
பெறுமதி:- 85000/=

| வழக்காளி | எதிர்:- |
|---|---|
| செல்லமுத்து செல்லப்பாண்டியன், 445/1, அம்பாள் வீதி, அன்புவழிபுரம், திருகோணமலை. | 1)காசிப்பிள்ளை கணேசமூர்த்தி, 2) சாந்தி விக்டர், அம்பலவாணர் கமம், எல் பீ-2,டீ எஸ்.5, பரந்தன். |

# இடைக்காலத் தீர்வை

இவ்வழக்கானது, நீதியாளர் செல்வி. சி.சாதனா அவர்களால் ஒருமுக விளக்கத்திற்கு என எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்காளியும், அவர் தரப்பு சட்டவாளர் திரு.தா. இ.குலசங்கர் அவர்களும் தோன்றியிருக்க, ஒருமுகவிளக்கம் 20.12.2004. அன்றைய நாள் நடைபெற்றது. ஒருமுக விளக்கத்தைத்தொடர்ந்து, அன்றைய நாளே ஒரு முகத்தீர்ப்பும் வழங்கப்பட்டது. அத்தீர்ப்பில், 85000/= பணத்தினை வழக்காளி ஒரே தடவையில் செலுத்த ஒரு கட்டளையும், 85000/=வுக்கு சட்ட வட்டியைப்பெற ஒரு கட்டளையும், 26சிறி 1256 பார ஊர்தியை மன்றில் பாரப்படுத்தி ஒரு கட்டளையும், 40000/= இழப்பீட்டைப்பெற ஒரு கட்டளையும், என்று கூறி மன்று தனது ஒரு முகத்தீர்ப்பினை வழக்காளிக்குச்சார்பாக வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் இடைக்காலத்தீர்வை பதியப்படுகின்றது.

வரைபு:- தா.இ.குலசங்கர்,
சட்டவாளர்,
"பகலவன் போட்டோக் கொப்பி"
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
(சி.13319)

நீதியாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

# பிரான்சில் கலவரம் தொடர்கின்றது
# 3000 வாகனங்கள் இதுவரை எரிப்பு

(பரிஸ்)

**பிரான்ஸ் பரிஸ் நகரில் தொடர்ந்து கலவரம் இடம் பெற்று வருகிறது. நகருக்குள் நுழைய பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது வரை கலவரங்களில் 3000 வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன.**

பரிஸ் நகரில் கடந்த மாதம் போராட்டம் நடத்திய ஆபிரிக்க இளைஞர்கள் இரண்டு பேர் பலியானர்கள் பொலிசாரை கண்டித்தும் ஆபிரிக்க இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதை கண்டித்தும் பரிசில் வாழும் ஆபிரிக்க இளைஞர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்தப் போராட்டம் கோஷ்டி மோதலாகி பாரிய கல வரமாக மாறியது.

கலகக்காரர்கள் வீடுகள், கடைகள், வாகனங்களைத் தீ வைத்து கொளுத்தி வருகின்றார்கள். கலவரத்தை கட்டுப்படுத்த முடியாமல் பரிஸ் நகர நிர்வாகம் திணறுகிறது..

சுற்றுலாப் பயணிகள் வரும் பரிஸ் நகரம் வெறிச் சோடிக் காணப்படுகிறது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பரிசுக்கு வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள வெளிநாட்டு பயணிகள் உடனடியாக வெளியேறி வருகிறார்கள். கலகக்காரர்கள் சுட்டதில் பத்து பொலிசார் காயமடைந்தனர்.

பரிஸ் நகரில் ஏற்பட்ட கலரவம் மற்ற நகரங்களுக்கும் பரவியது. அதுமட்டுமன்றி ஜேர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கும் பரவி விட்டது. பிரான்சில் 300 நகரங்கள் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.



பிரான்ஸ் கலவரத்தின் போது தீயிட்டு எரிக்கப்பட்ட கார் ஒன்றில் இருந்து தீயை அணைக்கும் தீயணைப்புப்படையினர்.



உலகிலேயே மிகப்பெரிய தனியார் மருத்துவமனை இது. அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தில் உள்ள மெம்பி பகுதியில் பிரமாண்டமாக இருந்த இந்த மருத்துவமனை நேற்று முன்தினம் தரைமட்டமாக்கப்பட்டது. அந்த இடத்தில் ஆராய்ச்சி மையத்துடன் கூடிய புதிய கட்டடம் இதை விட பிரமாண்டமாக எழும்ப உள்ளது. குண்டுகள் வைத்து மருத்துவமனை தகர்க்கப்பட்ட காட்சிகள் தான் இவை.

# டில்லி தொடர் குண்டுவெடிப்பு; பங்களாதேஷ் நபர் கைது

டில்லி தொடர் குண்டு வெடிப்பு விசாரணையில் பங்களாதேஷைச் சேர்ந்த நபர் ஒருவர் பிடிபட்டுள்ளார்.

டில்லியில் கடந்த மாதம் 29 ஆம் திகதி நடந்த தொடர் குண்டு வெடிப்புக்குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். டில்லி குண்டுவெடிப்புக்கு முன்பும், பின்பும் உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஒரு இடத்தில் இருந்து டில்லிக்கு மர்மத்தொலைபேசி அழைப்புக்கள் குறிப்பிட்ட ஓர் எண்ணுக்கு அதிக அளவில் வந்துள்ளன. அது பற்றி பொலிசார் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறார்கள்.

டில்லி கோவிதபுரிப் பகுதியில் பேருந்தில் ஏறிய ஒரு மர்ம நபர் பேருந்துப் பயணிகளில் ஒருவரான ஓமர் என்பவரிடம் வெடிகுண்டுப் பையைக் கொடுத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். அந்த நபரின்அங்க அடையாளங்களை விபரிக் கும்படி பேருந்து பயணிகளிடம் பொலிசார் விசாரித்து வருகிறார்கள். ஓமரிடமும் விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில் தொடர் குண்டுவெடிப்பில் தொடர்புடையவராகக் கருதப்படும் தீவிரவாதியின் உத்தேச படம் ஒன்றை டில்லிப்பொலிசார் வெளியிட்டிருந்தார்கள். அந்தப் படத்தில் இருப்பது போன்ற ஒரு நபர் பற்றிப் பொதுமக்கள் தகவல் அளித்தார்கள். அதன் பேரில் ஷஜைனல் அபதீன் புகாரி என்ற அந்த நபரைப் பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்தார்கள்.

# வழக்கை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும் சதாமின் சட்டத்தரணிகள் கோரிக்கை

(அம்மான்)

ஈராக்கில் தங்களின் உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதால் சதாமின் வழக்கு விசாரணையை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும் என அவரின் சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து சதாம் ஹுசைனின் சட்டத்தரணிகள் விடுத்துள்ள அறிக்கையில் "சதாம் ஹுசைனுக்காக ஆஜராகும் சட்டத்தரணிகளாகிய எங்களுக்கு தொடர்ச்சியாக கொலை மிரட்டல்கள் வந்த வண்ணமுள்ளன. சதாம் மீதான வழக்கு விசாரணை ஈராக்கில் நடைபெற்றால் அது நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடக்காது. கடந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற முதல் கட்ட விசாரணைக்கு மறுநாள் சதாம் தரப்பு சட்டத்தரணி கொலை செய்யப்பட்டார். இதனையடுத்து எங்களுக்கு பாதுகாப்புத் தரும்படி நீதிமன்றம் மற்றும் அரசிடம் கோரினோம். ஆனால் எங்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் எந்த ஒரு வார்த்தையும் இதுவரை எங்களுக்கு வரவில்லை. தொடர்ச்சியான மிரட்டல்கள் காரணமாக சதாம் ஹுசைன் அடைக்கப்பட்டிருக்கும் சிறைக்கு அடிக்கடி சென்று அவரிடம் பேச முடியவில்லை. எனவே சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணையை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும், என்று கூறியுள்ளனர்.

# ஊழல் புகாரில் நாட்டை விட்டு ஓடிய பெரு மாஜி அதிபர் சிலியில் கைது

(சன்டியாகோ)

ஊழல் புகாரால் நாட்டை விட்டு ஓடிய பெரு நாட்டின் முன்னாள் அதிபர் பியூஜி மோரி சிலி நாட்டில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பெரு வெளியுறவு அமைச்சர் ஆஸ்கார் மவுர்தா தெரிவித்தார்.

பெரு நாட்டின் அதிபராக கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 2000 வரை பதவி வகித்தவர் ஆல்பர்டோ பியூஜி மோரி. இவருக்கு எதிராக 21 குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் குழந்தை உட்பட 25 பேரை கொன்றது மற்றும் ஊழல் வழக்குகளும் அடங்கும். இந்த வழக்குகளை அடுத்து அவர் ஜப்பானுக்கு தப்பிஓடினார்.

அவர் மீது பெரு நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இது தவிர மோரியை தங்களிடம் ஒப்படைக்கும் படி பெரு நாட்டின் புதிய அரசு ஜப்பான் அரசிடம் கோரிக்கை விடுத்தது. ஆனால் ஜப்பான் இதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டது. அண்டை நாடான சிலி உட்பட பல நாடுகளிடம் மோரிக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்குமாறு பெரு அரசு கேட்டது. இந்த கோரிக்கையை ஏற்ற சிலி நாடும் மோரிக்கு எதிராக அண்மையில் பிடியாணை பிறப்பித்தது.

இந் நிலையில் சிலிக்கு வந்த பியூஜிமோரியை அந் நாட்டு பொலிசார் கைது செய்து விட்டதாக பெரு வெளியுறவுத்துறை அமைச்சர் ஆஸ்கார் மவுர்தா தெரிவித்தார். இது குறித்து பெருவில் உள்ள சர்வதேச பொலீஸ் தலைமை அதிகாரி கூறும் போது, மோரிக்கு எதிராக பல்வேறு சர்வதேச கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவை சிலியின் உள்ளூர் சட்டத்தை கட்டுப்படுத்தாது சிலி நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் வரை மோரி சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்படுவார் என்றார்.

# சுனாமி, பூகம்பம் வருவதை அறியும் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு வழங்கப்படும்

-ஜப்பான் அறிவிப்பு

சுனாமி மற்றும் பூகம்பம் வருவதை முன் னதாக அறியும் தொழில் நுட்பங் களை இந்தியாவுக்கு வழங்க தயார் என ஜப்பான் பாராளுமன்ற குழுத் தலைவர் கூறியுள்ளார்.

இந்தியாவுக்குச் சென்றுள்ள ஜப்பான் பாராளுமன்ற குழுவைச் சேர்ந்த உறுப்பினர் சன்சகுராய் நிருபர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பான் நாடு சுனாமி வருவதை முன்கூட்டியே அறியும் தொழில் நுட்பத்தைச் சிறப்பாகப் பெற்றுள்ளது. இதைக் கொண்டு ஜப்பான் நாட்டு மக்களின் உயிர்களையும் உடமைகளையும் காத்து வருகின்றோம்.

இந்தத் தொழில் நுட்பத்தை இந்திய அரசுக்கு ஜப்பான் நாடு வழங்கத் தயாராக உள்ளது.

பேரிடர் தடுப்பு சம்பந்தமான ஆராய்ச்சியை ஜப்பான் நாட்டின் விஞ்ஞானிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். இந்த ஆராய்ச்சி மூலம் ஏற்படும் பலனால் நாட்டில் ஏற்படும் பூகம்பம் போன்ற பேரிடர்களை முன்னதாக அறிந்து தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும். இந்த ஆராய்ச்சி முடிவு வெற்றிகரமாக அடைந்த பின்னர் இதையும் ஜப்பான் நாடு இந்திய அரசுக்கு வழங்கிடத் தயாராக உள்ளது.

இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளில் சுனாமிப் பாதிப்புகளுக்குப் பிறகு அளிக்கப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்ய வந்துள்ளோம். விரைவில் இலங்கை செல்வோம் என்று கூறினார்.



ஏராளமான பாகிஸ்தானியர்கள் நேற்றுமுன்தினம் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டருகே குவிந்து இந்தியப்பகுதிக்குள் நுழைய கோஷங்கள் எழுப்பியபடி வந்தனர். கும்பலைக் கலைக்க பொலிசார் தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.



அமெரிக்காவில் நேற்று முன்தினம் தாக்கிய சூறாவளியால் 24 பேர் பலியாகினர். 1000இற்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாகின. வாகனங்கள் பல சேதமடைந்தன. வாகனமொன்று சேதமடைந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# சீனாவில் சுரங்க விபத்து; 27 பேர் பலி; 21 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 27 பேர் பலியாகி உள்ளனர். 21 பேர் காயமடைந்துள்ளனர். ஏனையவர்களை மீட்கும் பணி தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. சங்காய் கிராமத்தில் உள்ள ஜிப்சம் சுரங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ் விபத்து ஏற்பட்டது. பொலிசாரும் தீயணைக்கும் படையினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணத்தை அறிவதற்கான விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. சகல சுரங்கங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சீன அரசாங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது.

# புலிகளை மகிழ்ச்சிப்படுத்தும் அனைத்துலகின் போக்கே அமைதி முயற்சிகள் முடங்கி இருப்பதற்குக் காரணம்

### அமெரிக்காவிற்கான சிறி.தூதுவர் பேர்னாட் குணதிலக கூறுகிறார்

**தமிழீழ விடுதலைப்புலிகளுடனான அமைதி முயற்சிகள் தற்போது முடங்கி இருப்பதற்குப் புலிகளை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கிலான அனைத்துலக நாடுகளினது போக்கு உள்ளிட்ட நான்கு காரணங்கள் இருப்பதாக அமெரிக்காவிற்கான சிறிலங்கா தூதுவர் பேர்னாட் குணதிலக கூறியுள்ளார்**

அமெரிக்காவில் இலங்கை அமைதி முயற்சிகள் முற்றுப் புள்ளியா? நம்பிக்கையா? என்ற தலைப்பில் கருத்தரங்கும் நடைபெற்றது. சி.எஸ்.ஐ.எஸ் என்ற அமைப்பு இ.டபிள்யூ.சி என்ற கல்வி மற்றும் ஆய்வு அமைப்புக்கள் சார்பில் நடத்தப்பட்டன.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைதி முயற்சிகள் முடக்கத்திற்கு நான்கு காரணங்கள் உள்ளன.

- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் சிறிலங்கா அரசு கையெழுத்திட வேண்டும் என்று நோர்வே அழுத்தம் கொடுத்தது. சிறிலங்கா படைத்தரப்பினர் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பான சரத்துக்களை மாற்றியமைக்க உரிய கால அவகாசம் அளிக்காமை.
- விடுதலைப்புலிகள் தங்களது அதிகாரத்தை விரிவாக்கவும், வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்காகவும் தங்களது இலக்குகளை மாற்றிக் கொண்டே இருந்தனர்.
- இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கான அதிகார எல்லைகள்.
- தமிழீழ விடுதலைப்புலிகளை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கிலான அனைத்துலக நாடுகளினது போக்கு ஆகியவை தான் காரணம் என்றார்.

அமெரிக்காவிற்கான நோர்வே தூதுவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான க்னூட் வொல்லிபெய்க் இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது இலங்கைப் பிரச்சினையில் நோர்வே அனுசரணையாளர் பணியை மட்டுமே மேற்கொள்கிறது. எந்த ஒரு தரப்புக்கும் அழுத்தம் கொடுக்கவில்லை. சிறி லங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பின் பேரில் தான் நோர்வே அனுசரணையாளர் பணியை மேற்கொண்டது. ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைதிப்பேச்சுக்களை இரு தரப்பும் முன்னெடுக்க வேண்டும். அந்த நடைமுறைகளில் புதிய கண்டுபிடிப்புக்கள் ஏதும் தேவையில்லை என்றார்.

இந் நிகழ்வில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பேசும் போது;

அமைதிப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலேயே சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களை முழு அளவில் ஆதரித்து அமைதி முயற்சிகளை சீர் குலைத்து வருகிறது சிறிலங்கா அரசு. இது விடயத்தில் தமிழ் மக்கள் அவதானமாகவே உள்ளனர். கூட்டாட்சி அமைப்பின் மூலம் சிறிலங்கா அரசுடன் அதிகாரப்பகிர்வுக்கு தமிழ் மக்கள் தயாராகவுள்ளனர். இந்த மையமான விடயம் குறித்து அமைதிப் பேச்சுக்களில் தீர்மானிக்கப்படும்.

இரு தசாப்த கால யுத்தங்களுக்குப் பிறகு அமைதிப் பேச்சுக்கள் மூலம் மீள் கட்டமைப்புக்கு தயாராக உள்ளோம். ஆனால் இந்த நடவடிக்கைகளை சிங்களத் தேசியவாதிகள் சீர் குலைத்து வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருப்பதால் சிங்களத் தேசியவாதிகள் ஊக்கமடைந்துள்ளனர் என்பது அமைதி முயற்சிகளை சீர் குலைக்கக்கூடியது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக அனைத்துலக சமூகமும் பக்கச் சார்பான நிலையை மேற்கொள்கின்றன.

சிங்கள தேசியவாதிகளின் கூட்டணியால் இலங்கை இனப் பிரச்சினைக்கான அமைதி முயற்சிகள் சீர்குலையும் எனத் தெரிவித்தார்.

## நுரைச்சோலை திட்டத்துக்கான அடிக்கல் நாட்டுகை இரத்து

சர்ச்சைக்குரிய நுரைச்சோலை அனல் மின் திட்டத்துக்காக இன்று புதன்கிழமை நடைபெற இருந்த அடிக்கல் நாட்டுகை விழா இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அடிக்கல் நாட்டப்பட இருந்த இந்த விழா பாதுகாப்புக் காரணங்களால் இரத்துச் செய்யப்பட்டதாக சனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தலுக்கு முன்பாக இந்தத் திட்டத்துக்கான ஒப்புதலை அமைச்சரவை வழங்காதிருக்க வேண்டும் என்றே சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவும், கருதுவதாகத் தெரிகிறது.

நுரைச்சோலை திட்டத்திற்கு சீன அரசு பாரிய நிதியுதவி அளிக்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் சீனப் பயணம் மேற்கொண்டிருந்த போது சந்திரிகா குமாரதுங்க கையெழுத்திட்டிருந்தார். ஆனால் நுரைச்சோலை திட்டத்திற்குஅப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இதனையடுத்து நுரைச்சோலைத் திட்டத்தை கிறிஸ்தவர்கள் எதிர்த்தால் தாம் அதைக் கைவிடத் தயார் என்று மகிந்த ராஜபக்ஷ அறிவித்தார். இருப்பினும் அடிக்கல் நாட்டுகைக்கான விழா ஏற்பாடுகளை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வந்தது. இதற்கான பணிகளையும் சிலாபம் ஆயர் வன்மையாகக் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் சந்திரிகாவின் அடிக்கல் நாட்டுகை விழா இரத்துச் செய்யப்பட்டு விட்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆங்கிலேயர் காலத்தில் பிரிந்தே இருந்தனர்

### -வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் சிங்களவர்கள் பல பிரிவினராகவும், தமிழர், முஸ்லிம்கள் பிரிந்தும் இருந்தனர். டி.எஸ். சேனநாயக்கவின் முன்னெடுப்புக்களிலேயே அனைவரும் ஒருங்கிணைந்து விடுதலை பெற்றோம். அதே பாதையைத் தான் நாம் இப்போது கடைப்பிடிக்கின்றோம். அமைதி முயற்சிகள் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சுதந்திரக் கட்சியினர் எம்மோடு இணைந்து பணியாற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹோமகமவில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ரணில் பேசும் போது மேலும் தெரிவிக்கையில்;

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் நாடு பிளவுபடப் போவதாக சில சக்திகள் பொய்ப்பரப்புரை மேற்கொண்டு வருகின்றன; அரசியல் இலாபங்களுக்காக அத்தகைய பரப்புரைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அதே போல் இராணுவத்தை நாம் பலவீனப் படுத்துவதாகவும், கூறி வருகிறார்கள் இராணுவத்தை பலப்படுத்துவதற்காக எமது செயற்றிட்டத்தை நாம் வெளியிட்டுள்ளோம் 21 ஆம் நூற்றாண்டினது சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் நமது இராணுவம் பலப்படுத்தப்படும் அதற்காக யுத்தத்திற்கு நாம் தயாராகிறோம் என்பது அல்ல.

நமது இராணுவத்தின் 43 படைப்பிரிவுகள் முழு வலுவில் இல்லை. அதனால் எந்தச் சவால்களுக்கும் முகம் கொடுக்கும் வகையில் ஆறு படைப்பிரிவுகள் முழுமையாகப் பலப்படுத்தப்படும் அடுத்த பத்து ஆண்டுகளில் இராணுவம் முழுமைக்கும் வலுப்படுத்தப்படும் என்றார்.

## புதுக்குடியிருப்பில் பல வீதிகளை குறுக்கறுத்துப் பாய்கிறது வெள்ளம்

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் பெருமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது.

தொடர்ச்சியாகப் பெய்த பெரும்மழை காரணமாக



பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் இடையிலேயே வீடு திரும்பியதையும் அவதானிக்க முடிந்தது. புதுக் குடியிருப்பு மாத்தளன் வீதியில் உள்ள சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை வளாகத்துள்ளும் வகுப்பறைகளுககுள்ளும் வெள்ளம் பெருக்கெடுத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

புதுக்குடியிருப்பு -மாத்தளன் வீதி புதுக்குடியிருப்பு மல்லை வீதி- பரந்தன் முல்லை வீதி ஆகிய வீதிகளை ஊடறுத்து பேரால் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இதனால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர் கொண்டனர்.

இதே வேளை மக்கள் குடியிருப்புக்களுக்குள்ளும், வெள்ளம் சென்று சேதத்தை விளைவித்துள்ளது.

இதே வேளை மன்னார் பிரதான வீதி 19 ஆம் கட்டைச் சந்தியடி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அருகாமையில் உள்ள மதகு உடைந்துள்ளதால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம். இதனால் பொது மக்கள் போக்குவரத்திற்கு சிரமப்படுகின்றனர். (08)

## அடிக்கல் நாட்டல்

"சீற்" நிறுவன அனுசரணையுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட செம்மலை கிழக்கு (நாயாறு) கிராமமக்களுக்கான நிரந்தர வீடமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த மூன்றாம் திகதி இடம் பெற்றுள்ளது.

"சீற்" நிறுவனத்தைச் சேர்ந்த ஞானம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் வீட்டிற்கான அடிக்கல்லினை செம்மலை கிழக்கு கிராம அலுவலர், செம்மலை கிழக்கு ஊரக மேம்பாட்டுத் தலைவர் மயில் வாகனம் "சீற் நிறுவனத்தைச் சேர்ந்த ஞானம், தேவதாஸ் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் ஆகியோர்கள் நாட்டினார்கள் "சீற்" நிறுவனமானது உலக வங்கியினால் மக்களுக்கு வழங்கப்பட்ட நிதிப் பங்களிப்புடனும் தமது நிதிப் பங்களிப்புடனும் இவ் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. (20)

## நியமனம் பெற்றும் வேதனம் இல்லை

### -பட்டதாரி ஆசிரியர் கவலை

(அலுவலக செய்தியாளர்)

கல்வி அமைச்சினால் அண்மையில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு வலயக் கல்விப்பணிமனையினரால் அவர்களுக்கான மாதாந்த வேதனம் வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த இருமாதங்களுக்கு முன்பதாக கல்வி அமைச்சினால் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பெற்று அவர்களுக்கான நியமனக் கடிதங்களை உரியவர்களிடம் கையளித்துள்ள பொழுதிலும் நியமிக்கப்பெற்ற ஆசிரியர்களின் கோவைகள் அந்தந்த வலய கல்விப்பணிமனைக்கு அமைச்சினால் அனுப்பிவைக்கப்படாததன் காரணமாக அண்மையில் நியமனம் கிடைக்கப்பெற்ற ஆசிரியர்களுக்கான மாதாந்த வேதனக் கொடுப்பனவுகளை வழங்க முடியாதுள்ளதென வலயக் கல்விப் பணிமனை அதிகாரி தெரிவித்துள்ளார்.

பட்டபடிப்பை முடித்துவிட்டு பல வருடம் காத்திருந்து ஆசிரியர் நியமனம் கிடைத்த பொழுதிலும் பணியினை மேற்கொண்டு அதற்கான வேதனத்தைப் பெறமுடியாத நிலையிலுள்ளோமென அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(சோ)



இராணுவத்தினரின் மண் அரண் காரணமாக மழை வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் பரந்தன் குமரபுரம் 9 ஆம் வீதியை மூடி தேங்கி நிற்பதனை படத்தில் காணலாம். (படம்:சோதி)

க.பொ.த உயர்தரப் பரீட்சை

# வெளிவாரியாக தோற்றும் மாணவர்கள் மாகாணக் கல்வி அமைச்சில் கட்டாயப் பதிவு

(கொழும்பு)

**கல்வி பொதுத்தராதரத்தில் உயர்தரப் பரீட்சைக்கு முதற் தடவையாக வெளிவாரியாகத் தோற்றும் மாணவர்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.**

அதேபோன்று பாடசாலைகள் ஊடாக இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது பாடநெறிகளில் மாற்றங்களைக் கொண்டிருப்பின் அவர்களும், தம்மைப் பதிவு செய்ய வேண்டும் என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த பதிவு இலக்கம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும். விண்ணப்பப் படிவங்களில் தம்மை பதிவு செய்வதற்கான கால எல்லை இம்மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கணித வினாடி வினாப் போட்டி

## விபுலானந்தா மாணவனுக்கு 2ஆம் இடம்

வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடாத்திய மாகாண மட்ட கணித வினாடி வினாப் போட்டியில் தரம் -06 ஆம் பிரிவில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியைச் சேர்ந்த தவராஜா சங்கீதன் எனும் மாணவன் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை அண்மையில் வெளியான க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேற்றின் பிரகாரம் விபுலானந்தா மத்திய கல்லூரியில் கணிதப் பிரிவில் ஐந்து மாணவரும், கலைப் பிரிவில் ஐந்து மாணவரும், உயிரியல் மற்றும் வணிகப் பிரிவில் தலா ஒருவருமாக வி.பிரேமவாஹினி (3ஏ), ஆகியோர் சித்தி பெற்றுள்ளனர்.

ஏ. சத்தியவாணி (ஏபிசி), ஏ. லிங்கேஸ்பரன் (2பிசி), கே. ஜெயராஜ் (பிசிஎஸ்), ஜி.தமிழ்ச்செல்வன் (3சி), நியூட்டன். நிசாந் (2சிஎஸ்), ஆகியோர்பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகியிருப்பதாக அதிபர் கே.முத்துலிங்கம் தெரிவித்தார்.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நெதர்லாந்து நிதியுதவி

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்கு நெதர்லாந்து அரசாங்கம் 62 கோடி 55 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. ஆழிப்பேரலையால் சேதமாக்கப்பட்ட படகுகளை மீள புனர் நிர்மாணம் செய்ய இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 24 ஆம் திகதி இலங்கை - நெதர்லாந்து அரசாங்கங்களிடையே கைச்சாத்தானது. இங்கு 391 படகுகளை மீள் நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதித் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் 60 வீத உற்பத்தியை இப்படகுகளே மேற்கொண்டிருந்தன.

அரசாங்கம், பாதிக்கப்பட்ட மீனவர், மீனவர் அமைப்புக்கள், படகு நிர்மாணிகள், வர்த்தக வங்கிகளுடன் இணைந்து இந்நிதியை அமுல்படுத்தவுள்ளது.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மக்களுக்கு விசேட கொடுப்பனவு

(அம்பாறை)

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட கரையோர மக்களுக்கு நான்காம் கட்டமாக விசேட கொடுப்பனவு ரூபா 5000 மக்கள் வங்கியால் வழங்கப்பட்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள நிரந்தர வருமானமுள்ள அரச ஊழியர்களுக்கு மூன்றாம், நான்காம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்படாத மக்களுக்கும் (சில) இக்கொடுப்பனவு வழங்கப்படுவதால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு இவை மறுக்கப்படுவது மனிதாபிமானமற்றது எனப் பலரும் கூறுகின்றனர்.

பாதிக்கப்படாத மக்களை இந்தக் கட்டத்திலாவது இனங்கண்டு தவிர்த்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்க முடியுமென சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் கூறுகின்றனர்.

# 24 மணி நேரத்தில் பலத்த மழை பெய்யும்

## –காலநிலை அவதான நிலையம்

தாழமுக்கம் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் கணிசமான அளவு மழை பெய்யக் கூடும் என்று காலநிலை அவதான நிலையம் கூறுகின்றது. இந்தக் காலநிலை மாற்றத்தால் பலத்த மழை பெய்யும் எனவும், சிறியளவிலான மண் சரிவுகள், வெள்ளப் பெருக்குகள் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மேற்கு, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களிலும், கரையோரப் பகுதிகளிலும் 24 மணித்தியாலங்களுக்குள் பலத்த மழை பெய்யக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக காலநிலை அவதான நிலைய பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

களனி கங்கையின் நீர் மட்டம், நாகலகம வீதியில் நேற்றுமுன்தினம் காலை 3.6 அடி உயர்ந் திருப்பதாகவும் தெரியவருகின்றது. 24 மணி நேரத்தில் காசல்ரி, நோட்டன் மவுசாஎல்ல, லக்சபான ஆகிய நீர்த் தேக்கங்களுக்குப் பாரிய வீழ்ச்சி கிடைத்துள்ளது.

எனவே அடுத்த 12 மணித்தியாலங்களுக்குள் களனி கங்கையின் நீர் மட்டம் 4.5 அடிக்குமேல் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. களனி கங்கையில் நீர்மட்டம் உயரும் பட்சத்தில் வெள்ள அபாயம் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறு தென்படுகின்றது.

# சர்வதேச நாடுகளின் நிதியுதவி தனி நபர்களுக்கு வழங்கப்படுவதில்லை

மங்கள சமரவீர

(கொழும்பு)

உதவி வழங்கும் சர்வதேச நாடுகளும் நிறுவனங்களும் நிதியுதவிகளை வழங்குகின்றனவே தவிர தனிநபர்களுக்குவழங்கவில்லை யென அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். கடந்த ஞாயிறன்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்பொழுது ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தவறிவிட்டதெனவும், தான் ஆட்சிக்குவந்தால் அனைத்து வெளிநாட்டு உதவிகளும் கிடைக்குமென எதிர்க் கட்சித் தலைவர் கூறிவருவதாக அங்கு சுட்டிக் காட்டிய மங்கள சமரவீர, உதவி வழங்கும் நாடுகளோ, நிறுவனங்களோ தனிநபர்களைப் பார்த்து நிதியுதவிகளை வழங்குவதில்லை, அரசாங்கத்துக்கே நிதியுதவிகளை வழங்கும் எனக் கூறினார்.

இவ்வாறான கருத்துக்களைக் கூறி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களைத் தவறான வழியில் இட்டுச்செல்வதற்கு முயற்சிப்பதாகவும் அவர் அங்கு குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் யார் ஆட்சிக்கு வந்தாலும் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவி வழங்கப்படுமென அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆர்மிடேஜ் கூறியிருந்தமையையும், அமைச்சர் மங்களசமரவீர ஊடகவியலாளர் மாநாட்டில் நினைவு கூர்ந்தார்.

# பொருளாதார வளர்ச்சி வீதம் ஐந்து வீதம் அதிகரிப்பு

## சர்வதேச நாணய நிதியம்

2005ஆம் ஆண்டில் சிறிலங்கா பொருளாதார வளர்ச்சியின் வீதமானது ஐந்து வீதமாக இருக்கலாம் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. ஆழிப்பேரலைத் தாக்கத்தை எதிர்நோக்கிய சிறிலங்கா, இத்தகைய பொருளாதார வளர்ச்சியினை எட்டியிருப்பது வெற்றிகரமான விடயம் என்று பொருளாதார வல்லுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்காவின் ஏற்றுமதி 12 வீதம் அதிகரித்துள்ளது. இறக்குமதி ஆறு வீதம் அதிகரித்துள்ளது.

சிறிலங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும். இதனால் கொழும்பில் இருந்து செல்லும் வானூர்திகளில் ஆசனங்களைப் பதிவு செய்வதில் நெருக்கடி நிலவுவதைக் காணக் கூடியதாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# ஒழுங்கான முறையில் அமைக்கப்படாத 45 இலட்சம் ரூபா பெறுமதியான விடுதி

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் கடந்த வாரம் வைத்திய அதிகாரிக்கான விடுதி ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. 45 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம் மழையின் போது நீர் கசிவதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். ஒழுங்கான முறையில் ஒழுங்கான பொருட்கள் கொண்டு இது நிர்மாணிக்கப்படவில்லை எனவும் வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பில் வாகன உரிமையாளர் சங்கம் அமைப்பு

மட்டக்களப்பு மாவட்ட வாகன உரிமையாளர்களுக்கான ஒன்று கூடல் கடந்த ஞாயிறன்று மட்டு கரடியனாறு மகாவித்தியாலய மண்டபத்தில் மாவட்ட வாகன துணைப் பொறுப்பாளர் திலகன் தலைமையில் இடம் பெற்றது. இதில் மாவட்ட வாகன பொறுப்பாளர் பிரியங்கன், கரடியனாற்றுக் கோட்டப் பொறுப்பாளர் சோழன் மற்றும் செங்கலடியில் இருந்து புல்லுமலை, செங்கலடியில் இருந்து உன்னிச்சை வீதிகளில் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகன உரிமையாளர்கள் கலந்து கொண்டு வாகன உரிமையாளர் சங்கமொன்றையும் உருவாக்கினர்.



வாகன சங்கத்திற்குத் தலைவராக கித்துள் கிராமத்தைச் சேர்ந்த பேரின்பநாதன் தெரிவு செய்யப்பட்டார் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு இடம் பெற்றது.

இவ்வொன்றுகூடலில் வாகனப் பொறுப்பாளர் பிரியங்கன் கருத்துத் தெரிவிக்கையில், காலத்தையும், நேரத்தையும் மதித்து பயணிகளுக்கு இடையூறு வழங்கா வண்ணம் வாகனங்களைச் சீரான முறையில் செலுத்த வேண்டும் என்றும், வாகன உரிமையாளர் சங்கம் விதிக்கும் முறைப்படி கட்டுக் கோப்புக்குள் இயங்குவதோடு விடுதலைப் போராட்டத்திற்கு தங்களால் முடிந்த பங்களிப்பை மனமுவந்து செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் கரடியனாற்றுக் கோட்டப் பொறுப்பாளர் சோழன் அவர்களாலும் சில கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.

# சுழிபுரத்தில் மிதிவெடியில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயம்

(வலிகாமம்)

சுழிபுரம் மேற்கு-காட்டுப்புலம் பகுதியில் கடந்த ஞாயிறன்று பிற்பகல் மிதிவெடியில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த எஸ்.சுப்பிரமணியம் (வயது-30) என்பவரே மிதிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்தவராவார். சுழிபுரம் காட்டுப்புலத்திலுள்ள தனது காணியில் நின்ற மரமொன்றில் குழைவெட்டிக் கொண்டு திரும்பும் போதே இவ் வெடிவிபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்தவர் நேற்று முன்தினம் மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (37)


# விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான ஒன்று கூடல்

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையினரால் அடுத்த ஆண்டு (2006) மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான ஒன்று கூடல் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் அம்பிளாந்துறை பாடசாலையில் வெல்லா வெளிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகஸ்தர் வைரமுத்து தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழீழ விளையாட்டுத் துறை மட்டு.மாவட்டப் பொறுப்பாளர் நேதாஜ், நிதர்சனப் பொறுப்பாளர் டயஸ், விளையாட்டு இணைப்பாளர் கண்ணன், கல்குடா வலயக் கல்வி உடற் கல்வி ஆசிரியஆலோசகர் நாகராஜா மற்றும் மாவட்ட பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வாக்களிப்பதைத் தீர்மானிக்கும் அரசியல் விழிப்பு தமிழரிடம் உண்டு!

ஐந்தாவது சனாதிபதித்தேர்தலை எதிர்கொள்ள சிறிலங்கா தயாராகிக் கொண்டிருக்கையில் தமிழ் மக்கள் இத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றனர். அதாவது தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதா? இல்லையா? என்பது குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இத்தேர்தலில் காத்திரமான பங்கெதனையும் வகிப்பதற்குத் தயாராக இல்லை.அதாவது இத்தேர்தலினால், தமிழ்மக்களின் பிரச்சினைகள் எதற்கும் தீர்வேதும் ஏற்படுவதற்கு வாய்ப்பெதுவும் இல்லை என்ற நிலையில் விடுதலைப்புலிகள் தேர்தலில் வாக்களிக்கும் முடிவை மக்களே மேற்கொள்ளட்டும் என



விட்டுள்ளனர்.

இதனை அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர் சந்திப்பின் போது பல தடவை வெளிப்படுத்தியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரும் சரி, ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளரும் சரி இனப்பிரச்சினை தொடர்பான உறுதி மொழிகளை உள்ளத்தில் இருந்து வழங்குவதில்லையென அவர் இறுதியாக ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியிலும் குறிப்பிட்டிருந்தார்.

அப்பேட்டியில் மேலும் அவர் "தேர்தல் முடிந்த பிறகு அவர்கள் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் மறந்து விடுவார்கள். நாம் முழுமையாகவே இந்தத் தேர்தல் குறித்து எந்தவித அக்கறையும் கொண்டிருக்கவில்லை. நாம் பொறுப்பானதொரு விடுதலைஇயக்கம். எமது மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க அவர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு" எனவும் தெரிவித்திருந்தார்.

சிங்கள அரசியல் வாதிகள் தேர்தலின் போது அளிக்கும் வாக்குறுதிகள், அவர்களினால் வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்பனவற்றிற்கும் அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு.

தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளிக்கும் அரசியல்தலைவர்கள் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல்தீர்வு காணப்படும் என வாக்குறுதிகள் அளிப்பினும் அவர்கள் அவ் விடயத்தில் முன்னேற்றங்கள் காண்பதற்கு எந்தவிதத்திலும் முயற்சித்ததில்லை. இது கடந்த கால அனுபவமாகும்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு சமாதான பேச்சுவார்த்தை மூலம் அரசியல்தீர்வு காணப்படும் எனக் கூறுபவர்களும் சரி, விடுதலைப்புலிகள் மீது எந்தவகையிலேனும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக்கூறுபவர்களும் சரி, ஒரு விடயத்தில் மிகவும் குறியாகவே உள்ளனர். தமிழ்மக்கள் உரிமைக்கான போராட்டத்தை அரசியல், இராணுவ ரீதியில் பலவீனப்படுத்த வேண்டும் என்பதே அதுவாகும்.

இதற்கு இவர்கள் தனியாக யுத்தத்தை மட்டும் ஒரு வழியாகத் தெரிவு செய்யவில்லை.சமாதான காலத்தையும் இதற்காகவே பயன்படுத்திக் கொண்டனர். அதாவது சமாதான காலத்தில் தமது ஆயுதப் படைகளை வளப்படுத்தியுள்ளதோடு. இராஜதந்திர ரீதியில் அழுத்தம் கொடுக்கும் வகையில் சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டவும் முற்பட்டு வந்துள்ளனர்.

சனாதிபதித்தேர்தலில் பிரதான தரப்புக்களில் ஒன்றான மகிந்த ராஜபக்ஷ தரப்பு இனப்பிரச்சினை விடயத்தில் தெளிவானதொரு முடிவை அறிவித்துள்ளது.அதாவது ஒற்றையாட்சி முறையின் கீழ் இனப்பிரச்சினைக்குத்தீர்வு. ஆகையினால் மகிந்த ராஜபக்ஷ தரப்பைப்பற்றி பரிசீலிக்க வேண்டியதான தேவை தமிழர் தரப்பிற்குஇல்லை.

டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி போன்றோர் மகிந்தவிற்கு வாக்களிக்குமாறு கோருவதே அவர்களின் அரசியல் வங்குரோத்துத்தனத்தையும் துரோகத்தனத்தையும் வெளிப்படுத்தி நிற்பவையாகும். அதாவது தனிநாட்டில் தொடங்கி மாகாணத்தில் சுயாட்சி எனக் கூறி அரசியல் நடத்திய ஈ.பி.டி.பி. குழுத்தலைவர் தற்பொழுது மீண்டும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதை ஆதரிக்க முன்வந்துள்ளமை அவரின் போக்கிடமற்ற நிலையையே காட்டுகின்றது.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு, ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு என்றால் என்ன? தற்போதைய அரசியல் அமைப்பு முறை தொடரும் என்பதே அது. அதாவது இனப்பிரச்சினை என்பதொன்றும் இல்லை. அதற்குத்தீர்வு என்பதொன்றும் தேவையில்லை என்பதே அதுவாகும். மறுவளமாகக் கூறுவதனால் இல்லாத பிரச்சினை ஒன்றிற்குத் தீர்வு எதற்கு என்பதாகும்.

ஆகையினால், மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிப்பதா? இல்லையா? என்பதை தமிழ்மக்கள் தீர்மானிப்பது இலகுவானதொன்றாகிவிடும். ஆனால் ஐ.தே.கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்பதா?இல்லையா? என்பது குறித்து முடிவிற்கு வருவதற்கு முன் தமிழ் மக்களுக்கு சிறிது குழப்பம் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

ஏனெனில் ஐ.தே.க.வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கயுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றிற்கு வழி ஏற்படுத்தியவர். அது மட்டுமன்றி இனப்பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகளுடன் ஆறு சுற்றுப்பேச்சு வார்த்தைகளை நடத்தியவர்.

ஆகையினால், ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தால் யுத்தநிறுத்தம் தொடரும், பேச்சுவார்த்தைகளும் இடம்பெறும், இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வொன்று எட்டும், விடுதலைப் புலிகள் இயக்கமும் ரணிலுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு இடையூறுகள் எதுவும் இருக்காது என மக்கள் நம்புவதற்கு வாய்ப்பு இருக்கும்.

ஆனால் தமிழ்மக்கள் சிந்திக்கும் அளவிற்கு ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுவிடும் என எண்ணுவதற்கு சாதகமான காரணிகள் எவையும்இல்லை. ரணில் விக்கிரமசிங்க யுத்தநிறுத்த உடன்பாட்டை செய்துகொண்டவராக இருக்கலாம். சமாதான முயற்சிகளை முன்னெடுத்தவராக இருப்பதாகவும் கூறலாம். ஆனால் அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சரி, நடவடிக்கைகளிலும் சரி பேச்சிலும் சரி சமாதானப் பேச்சுக்களில் முன்னேற வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசின் பிரதிநிதிகளுக்கும் இடையில் வெளிநாடுகளில் நடைபெற்ற பேச்சுக்களின் விளைவாகவே உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் இவ் உபகுழுக்களால் அவற்றின் நோக்கங்கள் எவற்றையும் நிறைவேற்ற முடியவில்லை. அதாவது அரசாங்கம் அதற்கு ஒத்துழைக்கவில்லை. மாறாக இராணுவத்தின் இருப்பை நிலை நிறுத்தவே அது முற்பட்டது.

எடுத்துக்காட்டாக பாதுகாப்பு உப குழுவில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக எந்தவித தீர்மானமும் மேற்கொள்ள முடியாதொரு நிலையே உருவாகியுள்ளது. இராணுவத்தினரின் நிலைப்பாட்டையே அரசாங்கமும் பின்பற்றியது. இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்தியாவில் இருந்து ஆலோசகர்கள், அமெரிக்காவிலிருந்து ஆலோசகர்கள் என அழைத்து வரப்பட்டனர். இவர்களால் உயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பு என்ற ரீதியில் போட்ட முட்டுக்கட்டைகள் பாதுகாப்பு உப குழுவின் செயற்பாடுகளையே முடக்கியது.

இதேபோன்றே உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைக்கான உப குழுவும், நிதி ஒதுக்கீட்டு விவகாரத்தால் செயற்பட முடியாததொரு நிலை உருவாகியது. அதாவது ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தையின் தீர்மானங்கள் எவற்றையும் அமுல்செய்ய ஐ.தே. கட்சியோ அதன் தலைவரோ தயாராக இருக்கவில்லை.

மாறாக ரணில் விக்கிரமசிங்க சமாதான காலத்தைப் பயன்படுத்தி சர்வதேச ரீதியிலான வலைப் பின்னல் ஒன்றை விடுதலைப்புலிகளுக்கு எதிராக உருவாக்க முனைந்ததோடு ஆயுதப்படைத்தரப்பையும் பலப்படுத்தும் நடவடிக்கையையும் மேற்கொண்டார்.

அதாவது யுத்தநிறுத்த காலத்தை சிறிலங்கா அரசாங்கம் தம்மைப் பலப்படுத்திக்கொள்வதற்கும் மற்றொரு யுத்தம் ஒன்றிற்குத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கும் பயன்படுத்திக்கொண்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே ஐ.தே. கட்சி தற்போதைய இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையை விடுத்துள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐ.தே.க. எதனைக் கூறியிருப்பினும் ஐ.தே.க வின் அணுகுமுறை இத்தகையதானதாகவே உள்ளது இதனை ஊர்ஜிதம் செய்வதாகவே காமினிதிசாநாயக்கவின் மகனும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான நவீன் திசாநாயக்கவின் பேச்சுக்களும் உள்ளன. கினிகத்தேனையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசிய நவீன் திசாநாயக்க கருணாவை விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரித்தது ரணில்விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளே எனப் பெருமை பேசியதோடு விடுதலைப்புலிகள் இனிப் போரிட முனைவார்களேயானால் இனி அவர்களுடன் சிறிலங்காப்படைகள் போரிடமாட்டாது. அமெரிக்கா, இந்தியப் படைகளே போரிடும் எனத் தெரிவித்திருந்தார்.

இப்பேச்சுக் குறித்து ஊடகத்தில் வெளியான தகவல் திரிக்கப்பட்டு விட்டதாகவும் தாம் அவ்வாறு எதுவும் கூறவில்லை எனவும் நவீன் திசாநாயக்க மறுப்புத்தெரிவித்திருப்பினும் மலையக மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகரன் இது குறித்து ஐ.தே.க விடம் விளக்கம் கோரியிருப்பதானது இப்பேச்சு உண்மையானதே என்பதை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

ஏனெனில் நவீன் திசாநாயக்க கூறுவது போன்று இப்பேச்சு சிங்களத்தில் நிகழ்த்தப்பட்டதினால் இப்பேச்சு வெளிவந்த தமிழ் பத்திரிகை ஊடகவியலாளரால் இதனைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது போய்விட்டது என ஏற்றுக்கொள்வதாயினும் மேடையில் இருந்த மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் விஜயகுமாரனுக்கும் நவீன் பேச்சு புரியாமல் இருந்திருக்க மாட்டாது. ஆகையினால் நவீன் திசாநாயக்க கூறுவது போன்று அவரது பேச்சு திரிக்கப்பட்டதாக இருந்திருப்பின் சந்திரசேகரன் ஐ.தே.க விடம் விளக்கம் கோரவேண்டியநிலை ஏற்பட்டிருக்கமாட்டாது.

அதாவது ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் வாக்குறுதிகள் எதை அளிப்பினும் இனப்பிரசினைத் தீர்வு தொடர்பான விடயத்தில் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவராகவே உள்ளார். யுத்தம் இல்லாது விடினும் சமாதான வழி முறையில் புலிகளைப் பலவீனப்படுத்தி தமிழ் மக்களின் போராட்டத்தை நலிவடையச்செய்தல் அன்றி விடுதலைப்புலிகள் யுத்தத்தைத்தெரிவு செய்தால் அமெரிக்கா, இந்தியா போன்ற



நாடுகளின் ஆதரவைப் பெற்று இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதென்பதே அவரின் குறிக்கோளாக இருப்பதையே நவீன் திசாநாயக்கவின் பேச்சு வெளிப்படுத்தியுள்ளது.

இத்தகையதொரு நிலையில் தான் இவ் இரு தரப்பின் மீது நம்பிக்கைகொள்வதில் பயன்இல்லை என்ற நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தேர்தலில் வாக்களித்தல் என்பதைத் தமிழ்மக்களின் முடிவுக்கு விட்டுவிட்டது. ஆகையினால் தமது சிந்தனைக்கு ஏற்ப தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்கலாம் வாக்களிக்காதும்விடலாம்.

ஆனால் தற்பொழுது வடக்கு-கிழக்கிலுள்ள பொது அமைப்புக்கள்- தமிழ்மக்கள் தேர்தலைப்பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பரவலாக முன்வைக்கத் தொடங்கியுள்ளமை இச் சனாதிபதித் தேர்தலினால் தமிழ் மக்களுக்கு எத்தகைய பயனும் கிட்டிவிடப்போவதில்லை என்ற முடிவிற்குத் தமிழ் மக்களைக் கொண்டு வருவதாகி விடும்.

அதாவது தமிழ்மக்கள் அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்கள் என்பதையும் நீண்ட தொலைநோக்குப் பார்வை அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்பவர்கள் என்பதையும் கடந்த காலங்களில் நிருபித்துள்ளனர். இந்தவகையில் சனாதிபதித் தேர்தல் குறித்த முடிவையும் மிகவும் உறுதியாகவும், தெளிவாகவுமே எடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

—ஜெயராஜ்

# கடந்த வாரத்தில்...

## 31.10.2005 06.11.2005

### 31

✖ யாழ்.கந்தர்மடம் சந்திக்கும் இலுப்பையடிச்சந்திக்குமிடையில் பொலிசாரின் ட்ரக்வண்டிமீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் பொலிசார் ஒருவர் பலி, மூவர் காயம். இதனையடுத்து அப்பகுதியில் படையினரும், பொலிசாரும் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

✖ யாழ்.இல் படையினரின் அத்துமீறலைக் கண்டித்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.



✖ மட்டக்களப்பில் படையினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளை மைதானமொன்றுக்கு அழைத்துச் சென்று தலையாட்டி முன் நிறுத்தினர். இதன் போது 20 பேரைப் படையினர் மேலதிக விசாரணைக்கென அழைத்துச் சென்றனர்.

✖ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பிரதிநிதி ஓ.ஏ.ஜோண் ஆகியோருக்கிடையில் மூதூர் சம்பூரில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

✖ இராணுவப் புலனாய்வுத்துறையின் உயரதிகாரியான கேணல் ரிஸ்வி மீடினின் கொலை தொடர்பாக பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளியான சமிலறொசான் என்ற சம்மி கடவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

### 01

✖ வடமராட்சியின் கரணவாய்ப்பகுதியில் உந்துருளியில் வந்த இரு ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் பலி.

✖ யாழ்.வடமராட்சி அல்வாய்ப்பகுதியில் இளைஞர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகினார்.

✖ காந்தரூபன் அறிவுச்சோலையின் 12ஆம் ஆண்டு நிறைவு விழா இடம்பெற்றது.



### 02

✖ ஓயாதஅலைகள் -03 இன் ஆறாவது ஆண்டின் வெற்றிவிழா ஒட்டுசுட்டான் பகுதியில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.



✖ மட்டக்களப்பு விநாயகபுரத்தில் இனந்தெரியாத நபர்களினால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை.

✖ யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற நான்கு வெவ்வேறான கைக்குண்டு வீச்சு சம்பவங்களில் ஐந்து படையினர் காயம்.

✖ திருகோணமலை மாவட்டக்கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்துடன் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் துரைரட்ணசிங்கம் மற்றும் பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினரும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

### 03

✖ சிறிலங்காப் பொலிசாரின் பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி யினரின் தினமுரசுப்பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த முச்சக்கர வண்டிமீது மட்டக்களப்பு திருமலைவீதியில் அடையாளந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஈ.பி.டி.பி தேசவிரோதி ஒருவர் நான்கு சிறிலங்காப் பொலிசார் மற்றும் முச்சக்கர வண்டியின் ஓட்டுநர் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

✖ போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் இராணுவத்தின் ஒவ்வொரு துறைக்கும் பல உதவிகள் கிடைப்பதால் இராணுவம் பலமடைந் துள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக் கிரமசிங்க யாழ்.பலாலிக்கு விஜயம் செய்து அங்கு இராணுவத்தினர்மத்தியில் உரையாற்று கையில் தெரிவிப்பு.



### 04

✖விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குள் கைக்குண்டுடன் நுழைந்த ஒருவர்கைது தப்பியோட முற்பட்ட ஒருவர் துப்பாக்கிச்சூட்டில் காயம்.

✖யாழ். சண்டிலிப்பாய்-மாசியப்பிட்டிப்பகுதியில் கழுத்துவெட்டப்பட்ட நிலையில் இனந்தெரியாத நபரின் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

✖ தமிழர் தாயகப்பகுதிகளில் கட்டட வடிவமைப்புக்கட்டுமானங்கள் தொடர்பான வழிகாட்டுநெறிகள் அறிமுகம் வடக்கு கிழக்கில் செயலாற்றும் பொறியியலாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது இந்த வழிகாட்டு நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.



### 05

✖ மட்டக்களப்பு சின்ன ஊறணிப் பகுதி சிறிலங்காப் படையினரின் பாரிய சுற்றிவளைப்பு தேடுதலுக்குள்ளானது.

✖ பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையினைச்சுற்றியுள்ள பிரதேசங்கள் இராணுவக் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் தேடுதலுக்குள்ளாக்கப்பட்டது.

✖திருகோணமலை பெரியகடை கடற்படைத்தள வீதியில் கடற்படை கிழக்குப் பிராந்திய அலுவலக பிரதான நுழைவாயிலுக்கு அருகில் உந்துருளியில் சென்று கொண்டிருந்த ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

✖ வாழைச்சேனை பிரதேசத்தில் செம்மண்ணோடையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்றில் முஸ்லிம் இளைஞரொருவர் காயம்.

✖திருகோணமலையில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகள் பொலிசாரினதும், படை யினரதும் சுற்றிவளைப்பு தேடுதலுக்குள்ளானது.

✖மட்டக்களப்பு ஏறாவூர் மற்றும் களுவங்கேணிப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவப்புலனாய்வுப் பிரிவு ஆயுததாரிகளால் மூன்று தமிழ்இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

### 06

✖அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் இனந்தெரியாதோரால் ஒருவர் சுட்டுக்கொலை.

✖ புத்தளம்- மன்னார் வீதியிலுள்ள நகைக்கடைஒன்றிற்குள் நுழைந்த இரு அடையாளம் தெரியாத நபர்களால் அதன் உரிமையாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் வர்த்தகர் படுகாயம்.

# உடுவே தம்மாலோக்க தேரரை கொல்ல பாதாள உலகக்குழு சதி

## பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை

ஜாதிக ஹெல உறுமயவின் அதிருப்தி பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக்க தேரரைக் கொல்ல பாதாள உலகக் குழு சதித் திட்டம் தீட்டியுள்ளதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

களனியாவில் இயங்கும் பாதாள உலகக் குழுவினர் தம்மாலோக்க தேரரைக் கொல்லப் போவதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் கூறினர்.

இதுதொடர்பில் மலீககந்தவில் நடந்த இரகசிய ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் பாராளுமன்ற உறுப்பினராகத்தேர்வு செய்யப்பட்ட தம்மாலோக்க தேரர் பின்னர் அதன்செயற்பாடுகளில் அதிருப்தியடைந்து சுயாதீனமாக இயங்கி வந்தார். எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாகவும் அண்மையில் அவர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ்மஞ்சுவின் வீட்டில் பொலிசார் சோதனை

## -மனைவி குழந்தைகளிடமும் விசாரணை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி லெப்-கேணல் ரிஸ்வி மீடின் கொலை சந்தேக நபரானபாதாள உலகக் குழுவைச்சேர்ந்த ஐஸ் மஞ்சுவின் வீட்டில் விசேட பொலிசார் கட்டுகஸ் தோட்டவில் சோதனை நடத்தினர்.

அவரது மனைவி மற்றும் குழந்தையை கொழும்புக்கு அழைத்து வந்து விசாரணைகளைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் திருமலையிலிருந்து எட்டு மாதங்களுக்கு முன்பாகவே கட்டுகஸ்தோட்டவில் ஐஸ் மஞ்சு குடியேறியுள்ளார்.

இந்த வழக்கில் தொடர்புடைய ஐஸ் மஞ்சுவின் நண்பர்களான புளொட் பாபு, சம்லி றொசான்,சம்லியின் சகோதரர்கள் ஆகியோரை பொலிசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இராணுவ அதிகாரி ஹசிம் கொலை வழக்கிலும் ஐஸ் மஞ்சுவுக்குத் தொடர்பிருப்பதாகவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

# வடக்கு கிழக்கில் நலன்புரி நிலையங்களில் தொடர் மழையால் மக்கள் அவதி

கடந்த நான்கு நாட்களாக வடக்கு கிழக்குப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழைகாரணமாக இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் மக்கள் பெருத்த துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

தொடர் மழை காரணமாக இவர்களுடைய இருப்பிடம் கூட ஒழுங்கான முறையில் நிர்மாணிக்கப்படாமலும், உரிய வேய்தல் உரிய காலத்தில் செய்யப்படாமையாலும், இம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் யாழ். மாவட்ட சமாசத் தலைவர் ந.கணேசு இது சம்பந்தமாகக் கூறுகையில்; நாங்கள் இடம் பெயர்ந்து இற்றைக்கு சுமார் இருபது வருடங்கள் ஆகின்றன.

இன்றும் நாம் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் என்ற இடத்திலேயே காலத்தைக் கடத்திக் கொண்டு இருக்கின்றோம். எமக்கு எந்த வகையான உதவிகளும், முழுமையாகக் கிடைப்பதில்லை. ஒன்றைச் செய்தால் ஒன்று இருக்காது என்ற நிலைமையே எம்மைப் பொறுத்த வரையில் காணப்படுகின்றது என்றார்.





சிறுவர் தின நிகழ்வுகள் மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் பாண்டியன்குளம் ம. வித்தியாலயத்திலும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் யோகபுரம் ம. வித்தியாலயத்திலும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வ. விக்கினராஜா தலைமையில் இடம்பெற்றது. இவற்றிற்கான பரிசளிப்புவிழா யோகபுரம் ம. வித்தியாலய மண்டபத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர் நா. நந்தகுமார் தலைமையிலும் இடம்பெற்றது. இதில் சிறுவர்களின் விளையாட்டையும், நிதி அனுசரணையாளர்களான சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பிரதிநிதி செல்வி மேரி மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். (படம்-அன்ரனி)

## வாக்காளர் அட்டை விநியோகம் குறித்து ஆராய வேட்பாளர்களுக்கு அனுமதி

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு உரிய முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளனவா என்பதை வீடுகளுக்குச் சென்று ஆராய்வதற்காக வேட்பாளரின் பிரதிநிதிக்கு அதிகாரமளிக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இந்த அதிகாரம் வழங்கப்படும் பிரதிநிதிகள் அனைத்து இல்லங்களுக்கும்சென்று வாக்காளர் அட்டைகள் உரிய வகையில் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறிய முடியும். அதேபோல தபால் காரியாலயங்களுக்கும் சென்று வாக்காளர் அட்டைகள் உரிய வகையில் விநியோகிக்கப்பட்டுள்ளனவா என இந்த அதிகாரம் பெற்றுள்ளோர் ஆராய முடியும்.

இதுவரை வாக்காளர் அட்டைகளில் சுமார்70 வீதமானவை விநியோகிக்கப்பட்டுவிட்டதாக தேர்தல் திணைக்களத்திற்கு தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

## சிறுவர் மருத்துவமனை சந்திரிகாவால் திறப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்தமாக பேராதனையில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் மருத்துவமனை, கடந்த ஞாயிற்றுக்கிழமை சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவர் மருத்துவமனை 31 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 189 கோடி 40 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ மனைக்கான மருத்துவ உபகரணங்கள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் ஏற்பாட்டின் கீழ் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 100 விளையாட்டு வீரர்களுக்கு சமாதான நீதவான் பதவி

இலங்கைநாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தி நாட்டுக்குப் புகழை தேடிக்கொடுத்தவர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கு நீதி மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் முதல் கட்டமாக நாட்டுக்குப் புகழைத் தேடிக்கொடுத்த 100 விளையாட்டு வீரர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்படவுள்ளன. (32)

## நீதிமன்றில் ஞானக்கோன் முன்னிலைப்படுத்தப்படுவார்

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கொல்லப்பட்ட வழக்கில் கைதுசெய்யப்பட்ட தமிழ் வர்த்தகர் ஞானக்கோன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று கொழும்பு நீதிமன்றில் கொழும்பு குற்றப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதி தெகிவளையில் கைது செய்யப்பட்டார் ஞானக்கோன். கடந்த ஒரு மாத காலமாக நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படாமல் விசாரணைகளை கொழும்பு குற்றப் பிரிவினர் நடத்தி வந்தனர்.

கதிர்காமர் கொலை தொடர்பான வழக்கின் விசாரணை அறிக்கை நீதிபதி சரோஜினி வீரவர்த்தனவிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் மேலும்சிலர் கைது செய்யப்படக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான சபாதேவன். எஸ்.சிவராஜன், டி. ஆரோக்கியநாதன் ஆகியோர் நவம்பர் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் இனியன், ரெங்கம் ஜெகனன், ஆயர்குமார் ஆகியோர் நவம்பர் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மனிதநேய கண்ணிவெடி அகற்றும் உறுப்பினர்களின் நேர்மைக்கு பாராட்டு

2004.12.26 ஆம் நாள் அன்று கள்ளப்பாடு முல்லைத்தீவு என்னுமிடத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது, எமக்குச் சொந்தமான சுமார் ரூபா இரண்டு இலட்சம் (2,00,000/=) பெறுமதியான தங்க நகைகள் சிறிய பிரயாணப் பையுடன் காணாமல் போயிருந்தது. இந்நகைகள் அடங்கிய குறித்த பிரயாணப் பை 2005.10.31 ஆம்நாள் அன்று மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் செயற்பாட்டின் போது குறித்த பிரிவினரின் உறுப்பினர்களால் கண்டெடுக்கப்பட்டு , அப்பிரிவுப் பொறுப்பாளரினால் எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் நேர்மையான செயற்பாட்டைப்பாராட்டி வாழ்த்துகின்றோம். மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவுப் பொறுப்பாளர், பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களின் பணி மேலும் சிறக்க வாழ்த்தி நிற்கின்றோம்.

திரு.திருமதி.நாகேஸ்வரன்,
குடும்பத்தினர்.
கள்ளப்பாடு-முல்லைத்தீவு

(9115)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை

### கிளிநொச்சி

### அழுக்குத்துணி கழுவுதல்

### 2006

2006 ஆம்ஆண்டு கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத்துணி கழுவுவதற்கான கேள்விகள் 2005.12.16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு 2005.12.16 ஆம்திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100.00 உம்,கேள்விப் பணமாக ரூபா 400.00 உம் செலுத்தி 2005. 12.16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

***நிறுவனங்கள்***

01. மாவட்ட வைத்தியசாலை , கிளிநொச்சி
02.சுற்றயல் கூறு, பளை
03.சுற்றயல் கூறு, அக்கராயன்
04.சுற்றயல் கூறு, பூநகரி
05.சுற்றயல் கூறு, முழங்காவில்
06.ம.ம.ம.மனை, தருமபுரம்
07.ம.ம.ம.மனை, வட்டக்கச்சி
08.ம.ம.ம.மனை, வேரவில்
09.ம.ம.ம.மனை,உருத்திரபுரம்

கேள்விகள் இரு பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வி விபரம் எழுதப்பட்டு இப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகத்தால் பொறுப்பேற்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ள முடியும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

வைத்திய கலாநிதி. கே. நந்தகுமாரன்,
மா.சு.சே.பி. பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி.13316)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை

### கிளிநொச்சி

### பால் தவிர்ந்தசமைத்த /உலர் உணவு வழங்கல்

### 2006

2006 ஆம்ஆண்டு கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்திய சாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 2005.12.16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு 2005.12.16 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத் திரங்க ளைப்பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழும்,எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாத முறியும் சமர்ப்பித்து கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100.00 உம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணமும் செலுத்தி 2005.12.16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

***விபரங்கள் வருமாறு***

அ. உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்.

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி. | 2000/- | 50,000/- | 20,000/- |
| சுற்றயல் கூறு பளை. | 1500/- | 30,000/- | 15,000/- |

ஆ. சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்.

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| சுற்றயல் கூறு ,அக்கராயன் | 1500/- | 40,000/- | 15,000/- |
| சுற்றயல் கூறு, பூநகரி | 1500/- | 30,000/- | 15,000/- |
| சுற்றயல் கூறு, முழங்காவில் | 1500/- | 40,000/- | 15,000/- |
| ம.ம.ம.மனை, தருமபுரம் | 1000/- | 25,000/- | 15,000/- |
| ம.ம.ம.மனை,வட்டக்கச்சி | 1000/- | 20.000/- | 15,000/- |
| ம.ம.ம.மனை, வேரவில் | 1000/- | 20,000/- | 15,000/- |
| ம.ம.ம.மனை,உருத்திரபுரம் | 1000/- | 20,000/- | 15,000/- |

கேள்விகள் இரு பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வி விபரம் எழுதப்பட்டு இப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகத்தால் பொறுப்பேற்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளமுடியும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ளமுடியும்.

வைத்திய கலாநிதி. கே. நந்தகுமாரன்,
மா.சு.சே.பி. பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி.13315)

# முஸ்லிம்களுக்கு ஐந்துசதவீத இட ஒதுக்கீடு ஆந்திர உயர் நீதிமன்றம் நிராகரித்தது

(ஐதராபாத்)

முஸ்லிம்களுக்கு ஐந்து சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் வகையில் ஆந்திராவில் காங்கிரஸ் அரசு பிறப்பித்த அவசர உத்தரவை ஆந்திர உயர்நீதிமன்று தள்ளுபடி செய்தது.


ஆந்திராவில் காங்கிரஸ் அரசு கடந்த ஆண்டு பதவியேற்றது. தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பதற்கான வழிகளை ஆய்வுசெய்து அறிக்கை தருமாறு மாநில பிற்பட்டோர் ஆணைக்குழுவை ஆந்திர அரசு கேட்டுக்கொண்டது. இதையடுத்து இந்த ஆணைக்குழு கடந்த மே மாதம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

அதில் மாநிலத்தின்மொத்த மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 9.2 சதவீதம் பேர் உள்ளனர். இவர்களைப் பின்தங்கியோர் "இ" பிரிவில் சேர்த்து ஐந்து சதவீத இடஒதுக்கீடு வழங்கலாம். ஆண்டுக்கு 2.5 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களை இந்தப் பட்டியலில் சேர்க்கக் கூடாது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட ஆந்திர அரசு,முஸ்லிம்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் ஐந்து சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் வகையில் கடந்த ஜூன் மாதம் அவசர உத்தரவைப் பிறப்பித்தது. இதற்கான மசோதாவும், கடந்த மாதம் நடந்த சட்டமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கிடையில், ஆந்திர அரசின் இந்த அவசர உத்தரவை எதிர்த்து ஆந்திர உயர்நீதிமன்றில் பிற்பட்டோர் அமைப்புகளும், மாணவர்களும் மனு தாக்கல் செய்தனர். அந்த மனுவில், 'முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்கினால், மாநிலத்தில் மொத்த இட ஒதுக்கீடு 50 சதவீதத்தைத் தாண்டி விடும். மேலும் முஸ்லிம்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து இட ஒதுக்கீடு வழங்கினால், பிற்பட்டோர் மிகவும் பாதிக்கப்படுவர். அதனால் இந்த இட ஒதுக்கீட்டை அனுமதிக்கக் கூடாது, என்று கூறியிருந்தனர்.

இந்த நிலையில், இந்த மனு மீதானதீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. 93 பக்கங்கள் கொண்ட இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டிருந்ததாவது மத அடிப்படையில் இடஒதுக்கீடு என்பதை முதலில் ஏற்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணஉதவிகளை வழங்குவதற்காக இந்தியாவும், பாகிஸ்தானும் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதியில் உள்ள ஐந்து இடங்களை நிவாரணப் பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்காக திறக்க ஒப்புக்கொண்டுள்ளன. முதலாவதாக நேற்றுமுன்தினம் புஞ்சநதி அருகே டிரிதிநோட்பகுதி வாகனப் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டது. இந்திய அதிகாரி ஏ.கே. பக்ஷியும், பாகிஸ்தானிய இராணுவ அதிகாரி தகிர் நக்வியும் எல்லை கோட்டருகே சந்தித்து கைகுலுக்கிக் கொண்டனர்.

## பாக் .இந்திய எல்லைப் பகுதியில் மக்கள் பாவனைக்கு பாதை திறக்கப்பட்டது

(காஷ்மீர்)

காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் உள்ள சாக்கான் தாபாக் சாவடி நேற்றுமுன்தினம் திறந்து விடப்பட்டது.

பூகம்பம் தாக்கிய ஜம்முகாஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் பகுதி காஷ்மீர் பகுதிகளைச்சேர்ந்த மக்கள் பூகம்ப நிவாரண உதவி பெறுவதற்கு வசதியாக கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் ஐந்து இடங்களைத் திறந்து விட இந்தியா, பாகிஸ்தான் அரசுகள் திட்டமிட்டிருந்தன.

இப்படிக் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் சில இடங்களைத் திறந்து விட்டால் இரு தரப்பு காஷ்மீர் மக்களும் அதன் வழியாக சுதந்திரமாக நடமாடி நிவாரண மருத்துவ உதவிகளைப் பெற முடியும். பிரிந்த உறவினர்களைச் சந்திக்க முடியும், கட்டுமானப் பொருட்களைபெற முடியும் என்று இரு நாடுகளும் தீர்மானித்திருந்தன. அதன்படி முதல் கட்டமாக ஒரே ஒரு இடத்தில் மட்டும் நேற்றுமுன்தினம் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டை திறந்துவிடுவது என. முடிவு செய்யப்பட்டது.

அதன்படி சாக்கான் தாபாக் எல்லைச்சாவடி திறந்துவிடப்பட்டது. இந்திய இராணுவ பிரிகேடியர் ஏ.கே. பக்ஷி பாகிஸ்தான் பிரிகேடியர் தாகிர் நக்வி ஆகியோர் எல்லைச்சாவடியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த வெள்ளை நாடாவை கத்தரித்து எல்லையைத் திறந்துவைத்தனர். இருவரும் தங்கள் வசம் இருந்த வெள்ளைக்கொடிகளை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு கைகுலுக்கினர். இந்திய இராணுவ அதிகாரி சந்தானுகோஷ் பாக் அதிகாரி அலிகான் உட்பட பல இராணுவ அதிகாரிகளும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.



மேற்கு வங்கமாநிலம் கொல்கத்தா அருகே உள்ள கலாய்குண்டா விமானப் படைத் தளத்தில் இந்திய-அமெரிக்க விமானப்படைகளின் கூட்டுப் பயிற்சி நடந்து வருகிறது. அமெரிக்கப் படைகள் இந்தியாவில் பயிற்சிமேற் கொள்வதைக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன்அருகே பயிற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய விமானப்படை விமானம் ஒன்று பறந்து கொண்டிருக்கிறது.

## தேர்தல் பிற்போடப்பட்டது

பீகார் மாநிலத்தில் நடந்து வரும் சட்டசபைத்தேர்தலில் 15 தொகுதிகளிற்கான தேர்தலை பீகார் தேர்தல் செயலகம் ஒத்திவைத்திருக்கிறது.

நான்கு கட்டங்களாக நடாத்தப்பட்டுவரும் பீகார் சட்டசபைத் தேர்தல்களில் மூன்றாவது கட்டமாக நடைபெறவுள்ள 15 தொகுதிகளிற்கான தேர்தலே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


## சாவு அறிவித்தல்

### சுப்பிரமணியம் சோமசுந்தரம்

நெடுந்தீவு மேற்கு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சோமசுந்தரம் 07.11.2005 திங்கட் கிழமை காலமானார். அன்னார் இலட்சுமியின் பாசமிகுகணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு சுப்பிரமணியம் இராமசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் குமாரவேலு இராமாசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, பசுபதிப்பிள்ளை (பண்டிதர்), குமாரவேலு (அதிபர்) மற்றும் கண்மணி, வள்ளியம்மை (ஓய்வுபெற்ற மருத்துவமாது) குமாரசாமி (ஓய்வுபெற்ற,அதிபர்),முத்துத்தம்பி (ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்), ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற மருதையினார், கோவிந்தர் குஞ்சாச்சிப்பிள்ளை பேரம்பலம் (ஒட்டன்குளம்) இராமநாதன் (திருகோணமலை), காலஞ்சென்ற காமாட்சி, கதிரவேலு (பொலிஸ் உத்தியோகத்தர்), சின்னத்துரை (அதிபர்) சுந்தரம்மா, தையல்முத்து மற்றும் தங்கம்மா, நவமணிதேவிஆகியோரின் அன்புமைத்துனரும் தேவதாசன் (கிராமஅலுவலர்) மனோகரதாசன், பாக்கியதேவி (பிரான்ஸ்) லோகேஸ்வரன் சத்தியதேவி காலஞ்சென்றவர்களான யொவனகுமார், பரமகுமார் மற்றும் பிறேம்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், கேதீஸ்வரராணி (மகளீர் அபிவிருத்தி போதனாசிரியர் துணுக்காய்) பத்மராணி நூலக உதவியாளர் நெடுந்தீவு) வசந்தராணி, சந்திரா ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 9.11.2005 புதன்கிழமை நெடுந்தீவு இந்துமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*தகவல்,*
*சோ. தேவதாசன்,*
*கிராமஅலுவலர்,*
*மல்லாவி.*

(5399)

*குடும்பத்தினர்.*



## கேள்வி அறிவித்தல்

### வீடமைப்பு ,பெருந்தோட்டஉட்கட்டமைப்பு அமைச்சு கட்டடங்கள் திணைக்களம்

01. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அழகியற்கலை இராமநாதன் அக்கடமியில் கட்டம் 11 பாகம்1 கட்டடப் பகுதிக்கு உருக்குக் கூரைவகைகள் அமைத்து உயர்த்தி, பொருத்துதல், இவ் வேலைக்கான சீலிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபைத் தலைவரால் 2005.11.21 மு.ப 10.00 மணிவரை கோரப்படுகின்றன.

02. கேள்விப்பத்திரங்கள் 2005.11.14 ஆம் திகதி பி.ப.3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமாக ரூபா இருநூற்றுஐம்பது மட்டும் (250/=) செலுத்தி, யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04. கடந்த 5வருடங்களில் இதேமாதிரியான வேலைகள் செய்த முன்னைய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழங்கப்படும் கல்வி ஆவணங்களைப் பெறமுன் இதற்கான ஆவணச்சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

05. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாணம் கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்களம் மே/பா பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச்சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்குமுன்னர் அனுப்பப்படவேண்டும்.

06. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

07. கேள்விஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விபரங்கள் யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதமபொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம்பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதமபொறியியலாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி.13317)

# உலக புகழ்பெற்ற நியூயோர்க் மரதன் கென்யாவில் பால்டெர் கெட் சம்பியன்



நியூயோர்க்கில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் கென்யாவின் பால் டெர்கெட் வெற்றிபெற்று சம்பியனானார்.

உலகப்புகழ்பெற்ற நியூயோர்க் மரதன் ஓட்டப்போட்டி கடந்த ஞாயிறன்று நடந்தது. 26.2 மைல் தூரம் கொண்ட இந்த ஓட்டம்,நியூயோர்க்கின் வெரோசானா பாலத்தில் தொடங்கி, சென்ட்ரல் பார்க்கில் முடிந்தது. இதில் உலகின் நட்சத்திர வீரர், வீராங்கனைகள் உட்பட சுமார் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதில் உலக சாதனையாளரான கென்யாவின் பால் டெர்கெட் சம்பியனானார். இவர் இரண்டுமணி நேரம் ஒன்பது நிமிடம் 30 வினாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்தார்.

தென்ஆபிரிக்க வீரர் ரமலா இரண்டு மணி நேரம் 9.31 வினாடிகளில் கடந்து இரண்டாம் இடம்பெற்றார். மூன்றாவது இடத்தை அமெரிக்காவின் மெப்கெப்லிசிகை (2:09:56) கைப்பற்றினார். பெண்கள் பிரிவில் லாட்வியாவின் ஜெலீனா பிரோகோகுகா (2:24:41 வினாடி) முதலிடத்தைக் கைப்பற்றினார்.

# ஸ்பெயின் துவிச்சக்கர வண்டி வீரர்களுக்கு போட்டிகளில் பங்கேற்கத் தடைவிதிப்பு



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த துவிச்சக்கர வண்டிச் சவாரி வீரர் றொபர்ட்டோ கெராஸ் ஊக்க மருந்து பாவித்தமை காரணமாக போட்டிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

கெராஸ் முன்னாள் லான்ஸ் ஆம்ஸ் ரோங்கின் நண்பராவார். இவரை கடந்த ஒக்ரோபர் மாதம் 27 ஆம்திகதி சந்தேகத்தின்பேரில் பரிசோதனை நடாத்திய குழுவினர் இவர் ஊக்கமருந்து பாவித்ததற்கான அறிகுறி காணப்பட்டதையடுத்து இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

கெராஸ் ஸ்பெயின் சைக்கிள் சவாரித் தொடரில் 2000,2003, 2004 ஆகிய வருடங்களில் பட்டம் வென்றவராவார்.

இந்த ஆய்வை நடத்திய குழுவினர் தகவலை ஊடகங்கள்வெளியிடக் கூடாது எனத் தெரிவித்திருந்த போதும் ரகசியமான முறையில் இத்தகவல் வெளியிடப்பட்டிருப்பதாகக் கூறப் படுகிறது.

# பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் பந்து வீச்சில் வோர்ன் முதலிடத்தில்



ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை பட்டியலில் பத்து ஆண்டுகளுக்குப்பின் அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் பந்துவீச்சில் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளார்.

சர்வதேச கிரிகெட் சபை (ஐ.சி.சி) புதிய தரவரிசை பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது. ஒருநாள் பட்டியலில் இந்திய அணி (104புள்ளி) தொடர்ந்து ஏழாவது இடத்திலே நீடிக்கிறது. டெஸ்ட் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் (880) பத்து ஆண்டுகளுக்குப்பின்னர் பந்து வீச்சில் முதல் இடத்தைக் கைப்பற்றியுள்ளார்.

இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத்தும் (878), மூன்றாவது இடத்தில் இலங்கையின் முரளிதரனும்(871) உள்ளனர். இந்திய அணியில் அதிகபட்சமாக இர்பான் பதான் 756 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தைப் பெற்றுள்ளார். துடுப்பாட்டத்தில் ராகுல் ராவிட் (851 புள்ளி) மூன்றாவது இடத்தையும், சேவாக்(835புள்ளி) நான்காவது இடத்தையும் பெற்றுள்ளனர். தென்னாபிரிக்காவின் ஜக் கலிஸ் (894) தொடர்ந்து முதலிடத்தைத் தக்கவைத்துள்ளார்.

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் வோன் பங்கேற்பது சந்தேகம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கேல் வோன் வரும் 12 ஆம் திகதி முல்தானில் ஆரம்பமாகும் பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்டில் பங்கு கொள்வது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது.

நேற்று முன்தினம் பாகிஸ்தான் "ஏ" அணியுடனான பயிற்சி ஆட்டத்தின்போது அவரது முழங்காலில் காயம் ஏற்பட்டதே இதற்குக் காரணமாகும்.

இதனால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனைக்குட்பட்டுள்ளார்.

வோன் கடந்த 2002 ஆம் ஆண்டிலும் அதே முழங்காலில் காயம் ஏற்பட்டதால் சத்திரசிகிச்சைக்குள்ளானார்.அதேவேளை கடந்த 18 மாதங்களுக்கு முன்பு பயிற்சியின் போதும் அதே காலில் காயமேற்பட்டதால் நியூசிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர் பங்கேற்கவில்லை.

இவர் இந்தக் காயத்தினால் சத்திர சிகிச்சைக்குட்பட்டு நிரந்தரமாக ஓய்வெடுக்க நேர்ந்தால் பாகிஸ்தானுடனான தொடர் இங்கிலாந்து அணிக்கு பெரும் பின்னடைவு ஏற்படலாம் என அவரின் வைத்தியர் கிரகரி குறிப்பிட்டுள்ளார்.

# ஆறாவது ஒரு நாள் போட்டி இன்று ராஜ்கோட்டில்

இந்திய- சிறிலங்கா அணிகளுக்கிடையிலான ஆறாவது ஒருநாள் போட்டி இன்று ராஜ்கோட்டில் நடைபெறவுள்ளது.

பகல் போட்டியாக நடைபெறும் இப்போட்டியில் அகமதாபாத்தில் சிறிலங்காவிடம் பெற்ற தோல்விக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஓய்வு வழங்கப்பட்ட சச்சின்,ஹர்பஜன் சிங், பதான் ஆகியோர் இந்திய அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.புதிதாக கைப்பும் இணைக்கப்பட்டுள்ளார்.

இதேபோல் முதல் வெற்றியின் மூலம் புதுத்தெம்பு பெற்றுள்ள சிறிலங்கா அணியும் வெற்றிக்காக கடுமையாகப் போராடும் என எதிர்பார்ப்பதால் இன்றைய போட்டியிலும் விறுவிறுப்பை எதிர்பார்க்கலாம்.



உதைபந்தாட்ட பெல்டன்அணியின் வீரர் எல்ஹஜி டியோவ்ப் எதிரணி வீரர் டேவிட்ஸ்,யங் பயோவிடம் இருந்து பந்தைப் பறித்து கோல்அடிக்க முயல்விப்பதைப் படத்தில்காணலாம்

# டென்னிஸ் தரவரிசை சானியா முன்னேற்றம்



உலக டென்னிஸ் தரவரிசை பட்டியலில் சானியா மிர்சா மீண்டும்31 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

டென்னிசில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமான சானியா மிர்சா பல்வேறு சாதனைகள் படைத்துள்ளார். இப்போது மேலும் ஒரு புதிய சாதனை படைக்க காத்திருக்கிறார். நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட உலக தரவரிசை பட்டியலில் இவர், 34 இருந்து , 31 ஆவது இடத்திற்கு முன்னேற்றம் பெற்றுள்ளார்

# செவிப்புலன் வலுவற்றோருக்கான விளையாட்டுப் போட்டி

வவுனியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கு இடையிலான செவிப்புலன் வலுவற்றோர்களுக்கான விளையாட்டுப் போட்டி கடந்த சனியன்று வவுனியா காமினி மாகவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் இரு மாவட்டங்களுக்கும் இடையிலான கிறிகெட், ஓட்டப்போட்டி, சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. இவ் விளையாட்டுப்போட்டியில் நூற்றுக் கணக்கான செலவிப்புலன் வலுவற்றோர் கலந்து கொண்டனர். (10)




# ஒரு நாள் தொடரைக் கைப்பற்றினாலும் அணியைப் பலப்படுத்தவேண்டியுள்ளது

சப்பல்



சிறிலங்காவுக்கு எதிரான போட்டியில் இந்தியா சிறப்பான வெற்றிகளைப் பெற்றிருந்தாலும் அணியைப்பலப்படுத்த இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது என இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல் தெரிவித்துள்ளார்.

நாங்கள் வெற்றிக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை வீரர்களின் அனுபவத்துக்கும்கொடுத்து வருகிறோம்.

சமீப கால வெற்றியில் இளைஞர்களின் பங்கு அதிகமாக உள்ளது. அவர்களின் தேவை உலகக் கோப்பை போட்டிக்கு மிக அவசியமானதாகும். எனவே அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிப்பதுடன் அனுபவத்தையும் கொடுத்து தயார்படுத்துவேன். காம்பீர்,ருத்ரா பிரதாப்சிங் ஆகியோரை இடையில் சேர்த்ததற்கு காரணம் அனுபவம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. தேவைப்பட்டார்கள் என்பதால் களத்தில் இறக்கினோம்.

நல்ல அனுபவம் இருந்தால்தான் இளம் வீரர்களால் பிரகாசிக்க முடியும்.எனவே அவர்களை முன்கூட்டியே களம் இறக்கியே ஆக வேண்டும்.இந்தத் துணிச்சலைத் தவிர்க்க முடியாது. அப்போது தான் உலகக் கோப்பை போட்டியை எதிர்கொள்ள முடியும்.

அது மட்டுமல்ல வீரர்கள் காயம் ஏற்படும்போதும் விளையாட முடியாத நிலை ஏற்படும் போதும் அவர்களுக்கு இணையான இளம் வீரர்கள் தயாராக இருக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு வீரர்களையும் தயார்படுத்தி வருகிறேன். இவ்வாறு கிரேக் சப்பல் கூறினார்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்தியஅணி 12 இல் அறிவிப்பு



இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஐந்து சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடர் போட்டி இம்மாதம் 16ஆம் திகதி தொடங்குகிறது.

இத்தொடரின் முதல் இரண்டு போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி பரோடாவில் வரும் 12ஆம் திகதி அறிவிக்கப்படும்.

இதற்காக கிரண் முரே தலைமையிலான ஐந்து பேர் கொண்ட தேர்வுக் கமிட்டி பரோடாவில் 12ஆம் திகதி கூடி அணியை முடிவு செய்யும்.

12ஆம் திகதி பரோடாவில் இந்திய-இலங்கை அணிகளுக்கு இடையிலான கடைசி ஒருநாள் போட்டி முடிந்ததும் இந்திய அணி அறிவிக்கப்படும்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலர் எஸ்.கே. நாயர் அணியை அறிவிப்பார்.



## சிந்தனைக்கு

ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ ஆயுத பலமோ அல்ல; அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.

தமிழீழதேசியத்தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 09.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அரசின் புதிய அங்கம்!

சிறிலங்கா இராணுவப்புலனாய்வுத்துறையின் மற்றுமொரு அங்கமாகப் பாதாள உலகக்கோஷ்டியினர் மாறியுள்ளனர். அதாவது ஒரு புறத்தில் துணைப்படை என்ற ரீதியில் தமிழ் இன விரோதக்குழுக்களை வைத்துக்கொண்டுள்ள சிறிலங்காப் புலனாய்வுத்துறை தற்போது சமூக விரோதச்சக்திகளான பாதாள உலகக்கோஷ்டியினரையும் தமது ஓர் அங்கமாகக் கொண்டுள்ளமை வெளிவரத் தொடங்கியுள்ளது.

பாதாள உலகக்கோஷ்டிக்கும் சிறிலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இராணுவத்தினருக்குமிடையில் தொடர்புகள் இருப்பதாகவும்-தப்பியோடிய படையினரில் பெரும் பகுதியினர் பாதாள உலகக்கோஷ்டிகளிலேயே அங்கம் வகிப்பதாகவும் ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால் தற்போது அண்மையில் கொலை செய்யப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரி கேணல் ரிஸ்வி மீடின் கொலையுடன் பாதாள உலகக்கோஷ்டியினருக்கும், சிறிலங்கா புலனாய்வுத்துறையினருக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவுகள் அம்பலத்துக்கு வரத்தொடங்கியுள்ளன.

சிறிலங்காவில் உள்ள பாதாள உலகக்கோஷ்டிகளுக்கும்-அரசியல்வாதிகளுக்கும் இடையேயுள்ள நெருக்கமான உறவுகள் குறித்து ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. குறிப்பாக, அரசியல் வாதிகளின் பாதுகாப்பிலேயே பாதாள உலகக்கோஷ்டியினர் இருப்பதும் அவர்களின் அடியாட்களாகச் செயற்படுவதும் ஏற்கனவே தெரிந்தவையே.

இதனால் பாதாள உலகக்கோஷ்டிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் சாத்தியமற்றதாக உள்ளன என சிறிலங்கா காவல்துறை வட்டாரங்களில் கூறிக்கொள்ளப்படுவதும் உண்டு. ஆனால் தற்போது பாதாள உலகக்கோஷ்டியினர் யாருக்கு அஞ்சி நடக்கவேண்டுமோ அவர்களின் வீட்டிலையே மது அருந்தி விருந்துண்ணும் நிலை காணப்படுகின்றமையும் சிறிலங்காவில் பாதாள உலகக்குழுக்களின் செல்வாக்கையும் பலத்தையும் வெளிப்படுத்துவதாகவேகொள்ள முடியும்,

பாதாள உலகக்கோஷ்டிகளுடன் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டுள்ளமைக்கு சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் சில நியாயங்களை கற்பிக்க முற்படக் கூடும், அதாவது விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் முயற்சி எனக் கூறவிளையலாம்.

ஆனால் ஒரு சமூகவிரோதியை எத்தகைய காரணங்களுக்காகவாவது வளர்த்துவிட முடியுமா? ஆனால் சிறிலங்கா அரசிலும், அதிகாரிகளின் மட்டத்திலும் வேரூன்றியுள்ள இனவாதம் இத்தகையதொரு தவறான வழியை அவர்களுக்கு நியாயப்படுத்துவதாகியுள்ளது.

சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கும் - பாதாள உலகக் கோஷ்டிகளுக்கும் இடையிலான உறவானது தனியாக புலிகளுக்கு எதிரான நடவடிக்கைளில் உதவுதல், சேர்ந்து இயங்குதல் என்பதுடன் மட்டும் நின்றுவிடுவதல்ல. சிறிலங்காவில் சீர்கெட்டுப்போயுள்ள சட்டம், ஒழுங்கு, மலிந்து போய்விட்ட ஊழல் மோசடி, அதிகரித்துவிட்ட சமூகச்சீர்கேடுகள் என்பனவும் பாதாள உலகக்கோஷ்டியினருக்கும், ஆயுதப்படைத்தரப்பினருக்கும் இடையில் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மையாகும்.

அதாவது ஆயுதப்படைத்தரப்பினரின் ஏஜென்டுகளாக, தரகர்களாக, விநியோகஸ்தர்களாகப் பாதாள உலகக்கோஷ்டியினரே இருந்து வருகின்றனர். வேறொருவகையில் அதிகரித்துவிட்ட புலனாய்வுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஆயுதப்படையினரின் தேவைகளை நிறைவுசெய்பவர்களாக பாதாள உலகக் குழுக்களே உள்ளன.

இந்த வகையிலேயே கொல்லப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரியான கேணல் மீடினின் தேவைகளை நிறைவு செய்பவராக அவரின் கொலை தொடர்பில் தேடப்பட்டுவரும் ஐஸ்மஞ்சு என்றும் பாதாளக்குழுத்தலைவர் இருந்துள்ளார். இந்நிலையில் ஐஸ் மஞ்சுவே புலனாய்வுத்துறை அதிகாரியைக் கொலை செய்திருப்பின் அவர்கள் இருவர் இடையிலான தொடர்பு குறித்து முழுமையான விசாரணை தேவை. ஏனெனில் இக்கொலைக்குப் பல்வேறு காரணிகள் இருப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

ஆனால் இதனை மேற்கொள்ள சிறிலங்கா புலனாய்வுத்துறையோ அன்றி சிறிலங்கா அரசோ தயாராக இருக்குமா? ஏனெனில் இவ்விசாரணை தனியாக புலனாய்வுத்துறை அதிகாரியின் கொலை தொடர்பான உண்மைகளை மட்டுமல்ல இவர்கள் தொடர்பான நடத்தைகளையும் வேறு விடயங்களையும் வெளிக்கொண்டுவருவதாகவே இருக்கும். இது சிறிலங்கா அரசிற்கோ அன்றி அதன் புலனாய்வுத்துறைக்கோ அன்றி ஆயுதப்படைத்தரப்பிற்கோ பெருமை சேர்ப்பதாக நிச்சயம் இருக்க மாட்டாது என்பதைத் துணிந்து கூற முடியும்.




# சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க பொது அமைப்புக்கள் தொடர்ந்தும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கக் கோரி பல பொது அமைப்புக்கள், உயர் கல்வி நிறு வனங்கள் பொதுமக்களிடத்தில் யாழ்ப்பாணத்தில் வேண்டு கோள்களை விடுத்துள்ளார்கள்.

ஏற்கனவே சனாதிபதித் தேர்தல் இடம் பெறுவதற்கு முன்னர் தமிழ் மக்கள் இந்த சனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதென தீர்மானித்து இருந்தார்கள். இந்நிலைமையில் சில விசமிகள் களவாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு மக்களைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மீண்டும் பொது அமைப்புக்கள், உயர் கல்வி நிறுவனங்கள் உட்பட மற்றும் பல பொது அமைப்புக்களும் இத்தகைய வேண்டுதல்களை வெளியிட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற தபால் மூல வாக்களிப்பில் பெரும் பான்மையான அரச உத்தியோகத்தர்கள் வாக்களிக்காத போதிலும் இந்த வேண்டுதல்களை மக்கள் மத்தியில் விடுக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு இடம் பெற்ற திணைக்களங்களுக்கு பாது காப்பு வழங்கப்பட்ட போதிலும் வாக் களிப்பு நிலையங்களில் மகிந்த ராஜ பக்ஷவின் முகவர்களாக வருகை தந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு இரண்டு பொலிசாரும் இரண்டு இராணு வத்தினரும் பாதுகாப்பு செயற் பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

அரச அலுவலகங்களில் இவர்கள் சமுகம் கொடுத்து இருந்தமையால் பொதுமக்கள் தமது கடமைகளை நிறைவேற்றப் பயந்து திரும்பிச் சென்றார்கள். பல மைல்கள் தூரம் இருந்து வந்தவர்கள் கூட திரும்பிச் சென்றார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். (41)

## கல்வியமைச்சின் செயலாளர் பதவி துறக்கத் தீர்மானம்!

(கொழும்பு)

சிறிலங்கா கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் அடுத்த வாரம் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக அமைச்சு வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே தாரா டி மெல் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசாங்கத்தின் கீழ் அவர் கல்வியமைச்சின் செயலாளராக இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்டார்.

கடந்த வாரம் அமைச்சு அதிகாரிகளை அழைத்த தாரா டி. மெல் இவ்வளவு காலம் தனக்கு உதவியமைக்காக நன்றி தெரிவித்துள்ளதுடன் கல்வித்துறையைக் கட்டியெழுப்பத் தான் மிகவும் முயன்றதாகவும் கூறியுள்ளார்.

தற்போது கல்வியமைச்சின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பதில் செயலாளராக பாராளுமன்ற விவகார அமைச்சின் செயலாளர் கே.டபிள்யூ. ஈ.கரலியத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்திலும் அவர் கல்வியமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

## அமெரிக்க விசா கோரியவர் கைது!

(கொழும்பு)

சிறிலங்காவில் தனக்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு விசா வழங்குமாறு கோரிய நபரை அமெரிக்க தூதரகத்தைச்சேர்ந்தவர்கள் கொள்ளுப்பிட்டிப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனிடையே கொள்ளுப்பிட்டி 13ஆவது ஒழுங்கையில் நேற்று முன்தினம் தற்கொலையங்கியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.இந்த அங்கிக்கும் விசா கேட்டு வந்த இந்த நபருக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்து கொள்ளுப்பிட்டிப்பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாகனக் கொள்ளையில் ஈடுபட்ட சிறிலங்கா பொலிஸ் குழுவிற்கு வலைவீச்சு!

(கொழும்பு)

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கும்பலொன்றுடன இணைந்து வாகனக் கொள்ளையில் ஈடுபட்ட சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் கம்பஹா பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

இரகசியப் பிரிவு பொலிசாரைப் போன்று நாடகமாடியே இந்த கொள்ளைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். பொலிஸ் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்த துணைப்படையின் மூவர் இந்த கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இருவரை நேற்று முன்தினம் கைதுசெய்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்தத் தகவல்கள் கிடைத்ததாக கம்பஹா பொலிசார் தெரிவித்தனர்.

இக்கொள்ளைக் கும்பலால் ஆனமடுவையில் கொள்ளையிட்டு பன்வில பிரதேசத்தில் மறைத்து வைத்திருந்த வான் ஒன்றையும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்வதற்குத் தேடப்படும் பொலிசார் கொழும்பு புலனாய்வுப் பிரிவில் பணியாற்றுபவர்கள் என்றும் அவர்கள் தற்போது தங்கள் இருப்பிடங்களிலிருந்து தப்பியோடியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த அதிகாரிகளைக்கொண்ட கொள்ளைக் கும்பல் நாட்டின் பல இடங்களிலும் வாகனக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# வடக்கு- கிழக்கில் தேர்தல் நடத்தலாமா?

# சிறிலங்காவின் உயர் நீதிமன்றில் இன்று தீர்ப்பு

(கொழும்பு)

தமிழர் தாயகத்தில் சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதை எதிர்த்து இரு வேட்பாளர்கள் தாக்கல் செய்திருந்த வழக்குகள் மீது இன்று புதன் கிழமை சிறிலங்கா உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவுள்ளது.

வேட்பாளர்கள் விமல் ஹேகன கே மற்றும் நெல்சன் பெரேரா ஆகியோர் வடக்கு- கிழக்கில் தேர்தல் நடத்தப்படுவது தங்களது அடிப்படை உரிமையை மீறுவதாகும் என்று வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த உயர் நீதிமன்ற நீதிபதி சரத் என் சில்வா நீதிபதிகள் சி.என் ஜயசிங்க, என். ஜி அமரதுங்க ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த ஒக்ரோபர் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர். வடக்கு கிழக்கில் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவது தொடர்பாக விளக்கத்தை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிடம் நீதிமன்றம் கோரியிருந்தது.

இதையடுத்து பிரதி சட்டத் தரணி சவின்த்ர நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகி சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் வடக்கு-கிழக்குத் தேர்தல் குறித்து தேர்தல் ஆணையாளர் 'விவாதித்ததாகவும் தேர்தல் நடைமுறைகளுக்காக 10 அம்ச செயற்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் விசாரணையின் போது வழக்குத் தாக்கல் செய்த இரு வேட்பாளர்களது சட்டத் தரணிகள் இந்த வழக்கில் தங்களையும் இணைத்துக் கொள்ள மனுச் செய்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் ஆகியவற்றினது சட்டத் தரணிகளும் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

அனைவரது கருத்துக்களையும் கேட்ட உயர் நீதிமன்றம் இன்று புதன் கிழமை தீர்ப்பளிப்பதாகத் தெரிவித்துள்ளது.

## இன்று சுகாதாரக்கருத்தரங்கு

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையினரால் "மழை கால தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றுவது" எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்ற ஆனையிறவு தட்டுவன்கொட்டி கிராமத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் வாய்ப்புற்று நோயினை ஆரம்பத்திலே கண்டு பிடிப்பதற்கான ஆய்வும், சலரோக நோயாளிகளை இனங்காணுவதற்கான பரிசோதனைகளும், குருதி அழுத்த நோயினை இனங்காணும் நடவடிக்கைகளும் இடம் பெறவுள்ளதுடன் பற்சிகிச்சை, பல்நோய் சம்பந்தமான வீடியோ படக்காட்சி, கண்காட்சி என்பனவும் இடம் பெறவுள்ளது. (சோ)

## கடலில் குளிக்கச் சென்ற வயோதிபர் பரிதாப மரணம்!

(வலிகாமம்)

நயினாதீவுக்கடலில் குளிர்ப்பதற்காக இறங்கிய வயோதிபர் கடற்சுழிக்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. நான்காம் வட்டாரம் நயினாதீவு என்ற இடத்தைச்சேர்ந்த அந்தோனி-வைத்தி(வயது-72) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த வயோதிபரின் சடலம் ஊர்காவற்துறைப்பொலிசாரால் மீட்கப்பட்டு நேற்று இரவு 7-30 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. (37)

### அரசியல்துறை..

நன்றி தெரிவித்ததுடன் தொடர்ந்தும் தமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பைக் கோரினார்.புதிய வதிவிடப்பிரதிநிதி சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அடுத்த ஆண்டு செயற்திட்டங்கள் குறித்து எடுத்துவிளக்கினார்.

### பாராளுமன்றத்....

பொருத்தமற்ற ஒன்று என்று கூறிய அவர்கள் கடந்த வரவு -செலவுத்திட்டத்தில் மானியங்களில் சமுர்த்தி பெறுவோருக்கு , தொழிலாளிகளுக்கு விவசாயிகளுக்கென எதனையுமே செய்ய முடியாத தற்போதைய பிரதமர் மற்றும் அரசாங்கத்தினால் ஐந்நூறு சதவீதத்திற்குக்கூட வேலை செய்ய முடியாது எனக்கூறினார்.

### புலிகள்-...

விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட மக்கள் தொடர்பாடல் பொறுப்பாளர் ஐயா மற்றும் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது காஞ்சிரங்குடா அதிரடிப்படையினர் அண்மைக் காலமாக மக்களை வெறுப்பூட்டும் விதத்தில், முக்கியமாக பெண்களுடன் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி இழிவாக நடந்து கொள்கின்றமையை சுட்டிக்காட்டியுள்ள விடுதலைப் புலிகள் இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீர்க்கமான முடிவின்ன எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுககப்பட்டதுடன். இந்தச் சந்திப்பில் பாதிக்கப்பட்ட மக்களும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இராணுவ...

மோசமாக உள்ளது. அனைவரும் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் மின்வேலியில் சிக்கி குருநகரைச் சேர்ந்த மீனவர் அண்மையில் உயிரிழந்தார். இதையடுத்து இராணுவ மின்வேலிகளை அகற்றுமாறு பொதுமக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில் இராணுவத்தினரே மின்வேலியில் சிக்கிக் காயமடைந்து உயிருக்குப் போராடி வருகின்றனர். (27,37)

### சமாதானப்..

வர்த்தகக் கப்பல்களை கடந்த 2003 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் யூன் மாதங்களில் சர்வதேச கடல் எல்லையில் தாக்கி அழித்தோம். விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வதேச நாடுகளின் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் நாம் முழுவீச்சில் செயற்பட்டோம். விடுதலைப்புலிகளின் பல ஆயுதக் கப்பல்களை நமது கடற்படை இடைமறித்தது

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்காலத்தில் இராணுவத்தினது செயற்பாடுகளில் குறுக்கீடுகள் இருந்ததாக கேள்விப்பட்டோம்.

இராணுவத்தினது எண்ணிக்கையை நாம் குறைக்கப் போவதில்லை. உண்மையில் நமது இராணுவத்துக்கு கூடுதலான படையினர் தேவை. நாம் அரசு அமைத்தால் இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தியா மற்றும் அமெரிக்க இராணுவ ஆய்வாளர்களின ஆலோசனைகளுக்கு அமையவே நமது இராணுவ வலிமை அதிகரிக்கப்படும். ஆனால் இந்த விடயம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு விடுதலைப்புலிகளுக்கு எதிராக அமெரிக்க, இந்தியப் படைகளை நாம் களம் இறக்க உள்ளதாக ஊடகங்களில் வெளியாகி உள்ளன.

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை சர்வதேச பாதுகாப்பு வலையத்துடன் சிக்க வைத்துள்ளோம். அதன் மூலமாக அவர்கள் மீண்டும் ஒரு யுத்தத்துக்குத் திரும்புவது தடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக அமைதி ஒப்பந்தம் நீடிப்பது என்பது சர்வதேச பாதுகாப்பு வலையத்தில் இப்போது நாம் அனைவரும் இணைந்துள்ளோம். அப்படி இல்லாது இருந்தால் நாம் மீண்டும் யுத்தத்துக்குத் திரும்பியிருப்போம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துகளை ஒவ்வொருவரும் குறை சொல்கிறார்கள். ஆனால் அது தொடர்பில் எதுவும் செய்ய எவரும் முன் வரவில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்தால் யுத்தம்தான்.

அமைதி முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள புதிய சவால்களுக்கமைய நாம் யுத்த நிறுத்தத்தை மீளாய்வு செய்வோம். அதில் எதுவித சந்தேகமும் இல்லை இந்த உண்மையை தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் யுத்த காலத்தில் பிளவை ஏற்படுத்தியிருக்க முடியாது. அதற்கான சரியான சூழலை உருவாக்க வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதற்காக விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குள்ளேயே கருணாவை ஆதரித்து வலை விரித்திருந்தோம். துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுத்து, வீதிகளைத் திறப்பது, வீதித் தடைகளை நீக்குவது போன்ற செயற்பாடுகள் மூலம் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு மாற்றுச் சூழலை நாம் உருவாக்கி கொடுத்துள்ளோம்.

தமிழீழ விடுலைப்புலிகளின் போராளிகள், ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு தாக்குதல் நடத்தும் ஆயுதக் குழுக்கள், கருணா குழுவுக்கு சிறிலங்கா புலனாய்வுத் துறையினரது ஆதரவு இருப்பதாக விடுதலைப்புலிகள் கூறுவது உண்மைதான். ஆனால் யுத்த நிறுத்தஒப்பந்தத்தின் படி ஆயுதக் குழுக்களை களையவில்லை என்பதை மறுக்கிறோம் கிழக்கு மாகாணத்தில் அதை சட்டம் ஒழுங்கு பிரச்சினையாகவே அதை பார்த்தோம்.

"கருணா" என்பது அமைதி முயற்சிகளினால் உருவாக்கப்பட்டது. எமது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் கருணா குழுவுடன் நாம் செய்ய வேண்டிய சிலவற்றை கண்டிப்பாக செய்வோம் என்றார் மிலிந்த மொறகொட

### சமூக...

பொறுப்பாளர் மேலும் தெரிவிக்கையில்

இவ்வாறு பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுவரும் பாரிய நிறுவனங்கள் இந்தப் பகுதிகளில் தமது பொருட்களை விற்பனை செய்வதில் தான் இருந்தார்கள் மாறாக அந்தப் பகுதிகளின் அபிவிருத்திகளில் எந்த அக்கறையும் காட்டவில்லை. இதனால் நாம் கொழும்பையே நாட வேண்டிய தேவை உள்ளது. அது மாத்திரமில்லாமல் இந்த நிறுவனங்கள் உள்ளூர் விற்பனை முகவர்களை நியமிக்காமல் தாமே செயற்படுவதால் இந்தப் பகுதியின் பணம் முழுவதும் அவர்களையே சென்றடைகிறது.

முன்னைய காலங்களில் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கமடைந்திருந்ததால் இந்தப்பகுதி வர்த்தகர்களால் விற்பனை முகவர்களாகச் செயற்படக் கூடிய நிலை இருக்கவில்லை. ஆனால் தற்போது அவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் முன்னேற்றம் கண்டுவிட்டார்கள். இதனால் அவர்கள் விற்பனை முகவர்களாக செயற்படும் பலம் வாய்ந்த தன்மை உள்ளது.

இவ்வாறு உள்ளூரிலேயே விற்பனை முகவர்களை நியமிக்கும் போது பொருட்கள் அனைத்து மக்களையும் சென்றடையும். இதன் மூலம் மக்களின் சிரமங்கள் குறைக்கப்படும். வாணிப அபிவிருத்தி என்பது நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளம். அதனால் நாம் வாணிப நடவடிக்கையை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நிறுவனங்களும் தமது வியாபாரத்தை மேம்படுத்துவதுடன் தாம் இலாபமடைகின்ற சமூகத்தின் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ,தீ)

### எதிர்க்கட்சிகள்...

பாடு என்று தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலமே நாட்டில் அபிவிருத்தியினை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்; 2006 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகை 194 ஆயிரத்து முன்னூற்று 91 மில்லியன் ரூபாவாகும் என அவர் கூறினார்.

வரவு-செலவுத்திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானம் 477 ஆயிரத்து 126 மில்லியன் ரூபாவாகும். அபிவிருத்திகளுக்காக செலவிடும் தொகை 671 ஆயிரத்து 517 மில்லியன் ரூபா என அமைச்சர் தெரிவித்தார்.

துண்டு விழும் தொகையை வெளிநாட்டு கடன் தொகையான 69 ஆயிரத்து 850 மில்லியன் ரூபா வெளிநாட்டு உதவி பத்து ஆயிரத்து 400 மில்லியன் ரூபா தேசிய பொருளாதாரத்தின் மூலம் 121 ஆயிரத்து 541 மில்லியன் ரூபா என்ற அடிப்படை யில் பெறப்படவுள்ளன.

இதேவேளை இவையனைத்தும் வங்கிகள் இல்லாத அமைப்புகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளப் படவுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

முத்திரை வரியின் மூலம் 3700 மில்லியன் ரூபா பெற்றுக்கொள்ளப் படவுள்ள அதேநேரம் வரிகள் மூலம் 3500 மில்லியன்களும் ஏனைய வருமானங்கள் மூலம் 2700 மில்லியன் ரூபாய்களும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இந்த நிலையில் 9600 மில்லியன் ரூபா அரசாங்க ஊழியர்களின் கொடுப்பனவுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

ஓய்வூதியத்திற்கு 4500 மில்லியன் ரூபாவும் சமுர்த்தி கொடுப்பனவுக்காக 6000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

சிகரட்டின் விலை 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மதுசாரம் குறைந்த மதுவகையின் விலை லீற்றர் ஒன்றுக்கு ஐந்து ரூபாவாலும் மதுசாரம் கூடிய மதுபானம் லீற்றர் ஒன்று 15 ரூபாவாலும் அதிகரிக்கப் படவுள்ளன.அரசாங்க ஊழியர்களின் ஊதியம் குறைந்தளவு 1300 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

2002 ஆம் ஆண்டு விலக்கப்பட்ட முத்திரை வரி மீண்டும் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

அரிசி மற்றும் பழவகைகளின் ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டியின் இறக்குமதி வரி 15 வீதத்தால் குறைக்கபடுகிறது.

இசைக் கருவிகளுக்கான இறக்குமதி வரி 15 வீதத்தால் குறைக்கப் படுகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு குறைந்தளவு சம்பளம் 11 ஆயிரத்து 630 ரூபாவாக நிர்ணயிக்கப்படவுள்ளது. அனைத்து சம்பள முரண்பாடுகளையும் தீர்க்கும் வகையில் இந்த சம்பளம் அமையவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நெல்லின் உத்தரவாத விலை 16 ரூபாவுக்கும் 17 ரூபா 50 சதத்திற்கும் இடையிலான தொகையாக நிர்ணயிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

செலிழந்துள்ள 194 அரிசி ஆலைகளை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பால் உற்பத்தியாளர்களின் நலன்கருதி ஒரு லீற்றர் பாலின் விலை 30 ரூபாவாக உயர்த்தப்படும்

நாட்டின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலான மேல் கொத்மலை நீர் மின்னுற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உதவியுடன் கொழும்பு-மாத்தறை தொடருந்து பாதை நவீனமயபபடுத்தப்படும் கொழும்பு கண்டி அதிவேக பாதை அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சியை எட்டு வீதமாக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு மற்றும் பிரதேச அபிவிருத்திக்கு 650 மில்லியன் ரூபா ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இந்த வரவு-செலவு திட்டத்தின் மூலம்ஐந்தாயிரம் மில்லியன் ரூபா அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் உட்கட்டமைப்பு, மீள்குடியேற்றம்,மின்சாரம் ,மீன்பிடி போன்ற துறைகள் முன்னேற்றப்படும் என அவர் தெரிவித்தார்

இந்தப் பிரதேசங்களில் 120 பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளதோடு 220 பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் நிகோர்ட் திட்டத்தின் கீழ் மன்னார், வவுனியா,மட்டக்களப்பு வைத்திய சாலைகள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,மூதூர்,அம்பாறை போன்ற பிரதேசங்களில் குடிநீர் வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் பால்உற்பத்தி மையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் யாழ்ப்பாண போதனா வைதத்தியசாலை அபிவிருத்தி செய்யப் படஉள்ளது.என அவர் கூறினார்

இதேவேளை வரவு- செலவுத் திட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படுவதை எதிர்த்து நேற்று ஐக்கிய தேசியக் கட்சியும் அதனுடன் இணைந்துள்ள கட்சிகளும் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தன.

தேர்தலின் பின்னர் இந்த வரவு-செலவுத்திட்டத்தைக் கொண்டு வருமாறு தாங்கள் கோரிய போதிலும் அரசியல் தேவைகளுக்காக இந்த வரவு-செலவுத்திட்டம் கொண்டு வரப்படுவதால் தாங்கள் இதனை எதிர்த்து பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளும் கட்சியினரும் ஜே.வி.பி உறுப்பினர்களுமே நேற்று பாராளுமன்றத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.